www.padippakam.com

# சிரித்திரு

ஆசிரியர்: 'துரைஸ்'

இவர்கள் கலந்துகொள்ளும்

காரசாரமான பட்டிமன்றம்















ஐரோப்பாவின் ஒரேயொரு நகைச்சுவை இதழ்

படிப்பகம்

www.padippakam.com




# 5 ஆண்டை நிறைவு செய்து புதிய ஆண்டில் காலடி வைக்கிறது

## * சபா அன் சன்ஸ் *

5 ஆண்டுகளாக பாரிஸ் மாநகரில்
மக்களின் அபிமான சேவையில்
'சபா அன் சன்ஸ்'
5 ஆண்டுகளாக எமக்கு ஆதரவு வழங்கி
ஊக்குவித்து உதவிய அனைத்து
வாடிக்கையாளர்கள், நண்பர்கள்
உற்றார், உறவினர்களுக்கும் எமது
உளம் நிறைந்த நன்றிகளை அன்போடு
தெரிவித்துக்கொள்கின்றோம்.

1992 இல்
5 வது
ஆண்டுநிறைவு



ஒரிஜினல் ஆடியோ வீடியோ கசேட்டுக்கள்
விற்பனைக்கும் வாடகைக்கும் கிடைக்கும்





வார,மாத சஞ்சிகைகள்,
மரக்கறி வகைகள்,
(இந்தியா,தாய்லாந்து நாடுகளிலிருந்து
பிரதி திங்கள் தோறும் இறக்குமதியாகிறது) நண்டு,
சுறா, இறால், மீன் வகைகள்

உங்கள் பாவனைக்குத் தேவையான
சகல பொருட்களையும்
ஒரே இடத்தில் கொள்வனவு செய்ய
விஜயம் செய்யுங்கள்

## 'சபா அன்சன்ஸ்'

சிரிக்கவும், சிந்திக்கவும் தூண்ட வருகின்ற
'சிரித்திரு' வை வாழ்த்தி வரவேற்கின்றோம்.

48404368

"சபா அன் சன்ஸ்"
RUE SAINT MARCUERITE
Mo : AUBERVILLIERS 4 CHEMINS

48404368

"கலைகளிலே ஈடுபாடுடையவன் கவலைகளை மறக்கிறான்"



## சேகர் ஆட்ஸ்

**SEGAR ARTS** *Commercial Artist*
FRANKFURT






படிப்பகம்

www.padippakam.com



அல்லாவும் ஜேசுவும்
ஆனைமுகக் கடவுளும்
எல்லாமே ஒன்றுதான்
'சிரித்திரு' முன்னாலே
சிந்திக்கத் தெரிந்தோரே
சிரியுங்கள் என்னாளும்.

சிரித்திரு
முகம் : 1
சிரிப்பு : 1
இதழ் : 3
சகல தொடர்புகட்கும்:
'SIRITTIRU'
90, PASSAGE BRADY,
PARIS 75010
FRANCE
TEL: 42 47 03 06

சிரித்திருவில் வரும்
அனைத்து விஷயங்களும்
உங்களை சிரிக்கவும், சிந்திக்க
வைக்கவும்
எம் கற்பனையில்
உருவாக்கப்பட்டவையே

*

ஓவியங்கள்

கணேஷ்ராஜ்

*

பிரெஞ்சு - தமிழ்
கலைஞர்கள் நட்புறவு
பணிமனை வெளியீடு

ASSOCIATION ARTISTIQUE
AMICALE FRANCO-TAMOULE

மாதம் ஒருமுறை
மலரும் 'சிரித்திரு'
சிரிக்க சிந்திக்க
உங்களை அழைத்துச் செல்லும்
கலையார்வம் கொண்ட
உங்கள் தோழன்

# எண்ணத்தை எழுதுகிறேன்



வேலை வீடு என்று வாழ்ந்து வந்த எம்மவர்களின் மத்தியில் இன்று ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. அறிவு பூர்வமாக சிந்திக்கின்றார்கள். அறிவு பூர்வமாக பேசுகின்றார்கள். பொழுது போக்குவதை கூட பயன் உள்ள வழிகளிலேயே கழிக்கின்றார்கள்.மூன்று மணிநேரம் செலவு செய்து திரைப்படம் பார்ப்பவர்கள் கூட தரமான படங்களை தெரிவு செய்தே பார்க்கின்றார்கள்.

நேரத்தின் மதிப்பை உணர்ந்து அதனை நல்ல முறையில் பயன்படுத்தவே மக்கள் விரும்புகின்றார்கள். கடந்த காலங்களில் பெரும்பாலானோர் இந்திய பத்திரிகைகளையே அதிகம் படித்து வந்தார்கள்.

ஆனால் இன்று ஐரோப்பாவில் நாற்பதிற்கும் மேற்பட்ட தமிழ் சஞ்சிகைகளும்,பல பத்திரிகைகளும் வெளிவருகின்றன.

அதனை வாசிப்பதற்கென்று ஒரு வாசகர் கூட்டம் தயாராகிவிட்டது என்பதை அறிகின்றபோது மகிழ்ச்சி ஏற்படுகிறது. ஆரம்பத்தில் இந்தப் பத்திரிகைகள் முள்ளின் மேல் நடந்து தான் வளர்ந்தன.

ஆனால் பத்திரிகைகள், புத்தகங்களை எல்லோரும் படிக்கவேண்டும் என்ற உணர்வினை ஐரோப்பாவில் உள்ள தமிழர்களுக்கு ஏற்படுத்தியது " பாரிஸ் ஈழநாடு" பத்திரிகை தான் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

ஐரோப்பாவில்மேலும் பல புதிய பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் வெளிவருவதற்கான அறிகுறிகள் தென்படுகிறதென்றால் அது வாசகர்களின் தொகை அதிகரித்திருப்பதையே எமக்கு உணர்த்துகின்றது.

"சிரித்திரு" தனது இரண்டாவது இதழிலேயே ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் வாழும் தமிழ் மக்களால் விரும்பிப் படிக்கும் ஒருபத்திரிகையாக வளர்ந்துவிட்டதை எமக்கு வரும் கடிதங்களும் உணர்த்தி நிற்கின்றன. இது எம்மை உற்சாகப்படுத்துகின்றது.

வளரும் எம் இளம் தலைமுறையினரை நல்ல வழியில் நெறிப்படுத்தவேண்டிய பொறுப்பு இங்கு வெளியாகும் பத்திரிகைகளின் கடமை என்பதை நாமும் அறிந்திருக்கிறோம்.

"படிப்பதனால் நீங்கள் அறிவை பெருக்குங்கள். படிப்பதற்கு நாங்கள் அறிவாய் கொடுக்க முயலுகின்றோம்."

- ஆசிரியர்



படிப்பகம்

www.padippakam.com



"சிரித்திரு" பத்திரிகையின் சிறப்பு வளர்ச்சிக்கு இலங்கை, இந்திய நகைச்சுவை கலைஞர்களின் வாழ்த்து

அன்புள்ள ஆசிரியர் அவர்கட்கு ,
உங்கள் கன்னி முயற்சியான இந்தப் பத்திரிகையின் வளர்ச்சி மென்மேலும் ஓங்கி வளர, இறைவன் ஆசியுடன் வாழ்த்துகிறோம். 'சிரித்திரு' சிரிப்பை மட்டும் கொடுப்பதோடு நின்றுவிடாமல் சிரிப்போடு ,சிந்தனைகளையும் தூண்டும் வழிகாட்டியாக இருக்கவேண்டும். சிரிப்பு கவலையை மறப்பதற்கு ஒரு சிறந்த "டானிக்". மனிதன் அன்றாடக் கஸ்டங்களை, தலைச்சுமைகளை- ஒரு குறிப்பிட்ட நேரம் சிரித்துக் கொண்டிருப்பதால் மறந்துவிடுகிறான். இன்றைய சூழ்நிலையில் இப்படியொரு பத்திரிகையின் சேவை ,மிகப் பெரும் பங்காற்றும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை. இந்த ஆக்கத்தின் மூலம் ஐரோப்பிய நாட்டில் வாழும் எழுத்தாளர்கள் ,கலைஞர்கள், இசைப்பிரியர்கள், கவிஞர்கள் மற்றும் திறமைசாலிகளின் திறமைகளை வெளிக்கொணர வழிவகுக்கவேண்டுமென்று வாழ்த்தி விடைபெறுகிறோம்.

## வாழ்த்துக்கள்



உங்கள் பிரியமுள்ள
வெண்ணிற ஆடை மூர்த்தி
எஸ்.எஸ்.சந்திரன்
மரிக்கார் ராம்தாஸ்
அப்புக்குட்டிராஜகோபால்
உபாலிசெல்வசேகரன்






ஒருவர்: சாத்திரியார் , எனக்கு 4 இல் கேதுவும் 6 இல் சனியனும் நிற்குதாம், என்ன மாதிரி எண்டு பாத்துச் சொல்லுங்கோ.

சாத்திரியார்: தம்பி, நீர் தண்ணியிலை நிற்கிறதாலை இப்போதைக்கு அவை உமக்கு ஒண்டும் செய்யாது.

-சு.சுரேந்திரன்-



மகன்: "அளித்தல்" என்கிற சொல்லிற்கும் "அழித்தல்" என்கிற சொல்லிற்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை உங்களிடம் வாத்தியார் கேட்டு வரச் சொன்னார்.

தகப்பன்: அப்படி, உன்ரை கொப்பனை வாத்தியார் இளிச்சவாயன் என்று நினைத்துவிட்டானா. போய்ச்சொல்லு அவனுக்கு ஒரு எழுத்துத் தான் வித்தியாசமெண்டு.



படிப்பகம்

www.padippakam.com



## பட்டி மன்றம்

# திரைப்பட வெற்றிக்கு யார் காரணம்?

## நாயகனா? இயக்குனரா?

சிரித்திருவின் சித்திரை இதழில் நடந்த பட்டி மன்றத்தில் ஏற்பட்ட குழப்பத்தில் பட்டி மன்றத் திற்கு தலைமை தாங்கிய பண்டிதமணி பரமசிவம் பிள்ளை பரலோகம் சென்றது வாசகர்கள் அறிந் ததே.
அன்னாரின் இடத்தை நிரப்ப பாரிசில் யாரும் இல்லாத காரணத்தால் சிரித்திருவின் வைகாசி இதழில் பட்டி மன்றம் இடம் பெறவில்லை. இந்த இதழில் எப்படியும் பட்டி மன்றம் நடைபெறவேண் டும் என்று வாசகர்கள் கடிதங்களிலும் தொலை பேசியிலும் எமக்கு கொடுத்த அன்புத் தொல் லையின் காரணமாக நாம் இந்த பட்டி மன் றத்தை தமிழ்நாட்டில் நடாத்தி உங்களுக்கு தரு கின்றோம்.
மக்களுக்குத் தேவையான விடயத்தையே நாம் பட்டிமன்ற தலைப்பாக எடுப்பது வழமை.
அந்த வரிசையில் இம்முறை உங்களின் வாழ்க் கைக்கு மிக அத்தியாவசிய தேவையான திரைப் படங்களின் வெற்றியை பற்றி ஆராய முற்பட்டுள் ளோம்.
ஒவ்வொரு மனிதனும் வாழ்க்கையில் கண்டிப் பாக தெரிந்து கொள்ளவேண்டிய அறிவுபூர்வ மான விசயம் இது. திரைப்படங்களின் வெற்றிக்கு காரணம் நடிகர்களா ? அல்லது இயக்குனர்களா ? என்ற தலைப்பினை தேர்ந்தெடுத்து திரையுல கும் மக்களும் நன்கு மதிக்கும் திருமுருககிருபா னந்த வாரியார் அவர்களை தலைமை தாங்கும் படி நாம் அழைக்க. இதற்காகவே காத்துக் கொண்டு இருந்தவர் போல வாரியார் அவர்கள். எதுவித மறுப்பும் கூறாமல் ஆவலோடு சம்ம தித்து பட்டி மன்றத்தை குழப்பம் எதுமின்றி திற மையாக நடாத்தி தந்துள்ளார். வாரியார் அவர் களுக்கும் பட்டி மன்றத்தில் கலந்துகொண்டவர் களுக்கு நன்றிகளைக் கூறிக்கொண்டு பட்டி மன்றத்தை உங்களுக்கு தருகின்றோம். **கிருபா**



சுப்பர்: கந்தையா அண்ணை, வெளிநாடுகளி லையும் சூரன் போர் நடக்குதே?

கந்தையா: ஏன் என்ன விசயம்

சுப்பர்: இப்ப தான் மேன்ரை கடிதம் வந்தது. உவன் சின்னப்பூவின்ரை மகன் அங்கை தலையை மாத்திக் கொண்டு திரியிறானாம்.

- சுரேந்திரன் -

**னந்த வாரியார்:** முருகனுக்கு அரோகரா. ஆறு முகனுக்கு அரோகரா, என் அப்பன் முருகப்பெரு மான் ஆறுமுகங்களுடன் அவதரித்தார். இந்த பட்டி மன்றத்தில் விவாதம் புரிய ஆறுமுகங்கள் வந்திருக்கின்றன. எல்லாம் முருகன் செயல். திரைப்படங்களின் வெற்றிக்கு காரணம் நடிகர் களா? அல்லது இயக்குனர்களா? என்பது பற்றி விவாதிக்க திரைப்பட துறையில் முன்னணியில் உள்ள ஆறுபேர் வந்திருக்கின்றார்கள். என் அப் பன் முருகன் அருளால் எல்லாம் நல்லபடியாக நடக்கவேண்டி இந்த பிள்ளைகள் என்ன கூறு கின்றார்கள் என்று பார்ப்போம்.முதலில் நடிகர்க ளின் அணியில் இருந்து நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களை அழைக்கின்றேன்.
முருகப் பெருமானின் அண்ணனுக்கு பெயர் கணேசன் அழகான முகம் கொண்டவன் அதே போல் நம்ம கணேசனும் என்ன ஒற்றுமை பார்த் தீர்களா ? இப்பொழுது தம்பி கணேசன் பேசு வார்.
**சிவாஜி கணேசன்:** பிள்ளைகளே உங்கள் எல் லோருக்கும் வணக்கம் இந்த திரைப்பட துறை யில் நான் மூன்று தலைமுறையை கண்டுவிட் டேன். இண்ணைக்குத்தான் என் பிள்ளைக ளுக்கு திரைப்படத்தின் வெற்றிக்கு காரணம் நடிகர்களா இயக்குனர்களா என்ற சந்தேகம் வந்திருக்கு. ஐயா நான் அனுபவத்தை வைச்சு சொல்லுறன். ஒரு டைரக்டர் இல்லாமலேயே ஒரு படத்தை எடுக்கலாம். ஆனால் நடிகர்கள் இல்லாம படம் எடுக்கவே முடியாது. (பலத்த கைதட்டல்) டைரக்டர் என்பவன் ஒரு எஜமான். இந்த எஜமான் தனது தொழிற்சாலையில் இருந் தாலும் இல்லாவிட்டாலும் வேலைத்தலம் இயங் கும். ஆனால் நடிகர்கள் என்ற இந்த தொழிலாளர் கள் இல்லாவிட்டால் வேலைத்தலம் இயங்குமா ? (பலத்த கைதட்டல்) இதுவரை காலமும் நான் ஏன் டைரக்டர் ஆகவில்லை? நான் உழைச்சு சாப்பிட விரும்புகிறவன். மற்றவனுடைய உழைப் பில் நான் சாப்பிட விரும்பவில்லை. ஆதலால் நான் தொழிலாளியாகவே இருக்கின்றேன். இதைவிட அதிகமாக என் பிள்ளைகளுக்கு விளங்கப்படுத்த தேவையில்லை உங்களுக்கு எல்லாம் விளங்கும். வாரியார் அய்யாவுக்கு விளங்காதா என்ன !



படிப்பகம்

www.padippakam.com



ஐய்யா நல்ல தீர்ப்பா கூறுங்க. சிலர் வாரியார் ஐய்யாவின் தயவால் இங்கு வெற்றி பெறுவேன் என்று நம்புறன். நன்றி வணக்கம்.

**வாரியார்:** தம்பி கணேசன் தன்னைப் போல பெரிய கருத்துக்களை கூறிவிட்டு சென்றுள்ளார். இவர் தன்னுடைய உடம்பை கொஞ்சம் கவனிக் கவேண்டும்.
(சிவாஜி கணேசன் புன்னகைக்கின்றார்)
இவர் கணேசன் என்ற தன்னுடைய பெயரை மாற்றி முருகன் என்று வைத்தால் சிறப்பாக இருக்கும் என்று நம்புகிறேன்.
(சிவாஜியின் முகத்தில் ஒரு மாற்றம்)
அடுத்து இயக்குனர் அணியில் இருந்து தம்பி பாரதிராஜா அவர்கள் பேசுவார்.
அந்தப் பாரதி கவிதைக்கு ராஜாவா இருந்தவர் இந்த பாரதிராஜா ராஜா தானா என்பதை இப் போது பார்ப்போம். அரோகரா !



**பாரதிராஜா:** என் இனிய தமிழ்மக்களே ! கிரா மத்து மண்ணில் இருந்து வந்த இந்த பாரதிராஜா செருப்பில்லாத கால்களுடனும் வெறுமையான கதைகளுடனும் நிறைய விசயங்களையும் இந்த மண்டையிலே சுமந்து கொண்டு சென்னைக்கு வந்தபோது, என்னை ஏளனமாக பார்த்தவர்க ளும் எள்ளி நகையாடியவர்களும் இன்று என் சாதனைகளைப் பார்த்தபின் நீ தான் திரைஉலக ராஜா என்று அழைப்பதைக் கண்டு அடக்கமாக ஆனந்தப்பட்டவன் இந்த பாரதிராஜா.
இன்று திரையிலே மின்னும் எத்தனையோ நடிகர் களை மக்களுக்கு அடையாளம் காட்டியவன் இந்த பாரதிராஜா (கைதட்டல்) படத்திற்கு படம் புதிய நடிகர்களை நாங்கள் அறிமுகப்படுத்துகி றோம். எங்களால் அறிமுகமாவதற்கு முன்பு இவர்கள் வீதியில் போனால் திரும்பி பார்க்க யாரும் இல்லை. இன்று நீங்கள் பெரிய ஸ்டாராக இருக்கலாம். உங்களை சுப்பர் ஸ்டார் ஆக்கியது நாங்கள்தானே (பலத்தகைதட்டல்) பூவிற்கு வாசனை உண்டு. நாருக்கு வாசனை உண்டா? பூ என்ற இயக்குனர்களின் உதவியால் தான் நார் என்ற நடிகர்கள். மாலை என்ற திரைப்படத்தில் இணைகின்றார்கள். பூவின் வாசனையை தூர இருந்து நுகரலாம். ஆனால் இந்த பூவிற்குள்ளே அடங்கி இருக்கும் நார்கள் தான் இந்த நடிகர்கள் என்று கூறி என்னை வாழவைத்தக் கொண்டிருக் கும் ரசிகப் பெருமக்களையும் இந்த மண்ணையும் வணங்கி விடைபெறுகின்றேன் வணக்கம்.
**வாரியார்:** தம்பி பாரதிராஜா தனது பக்கநியா யத்தை அழகாக எடுத்துரைத்தார். இப்போது நடிகர்கள் பகுதியில் இருந்து இன்றைய சுப்பர்



**ஒருவர் :** இவ்வளவு வயசிலும் எவ்வளவு இளமையாக இருக்கிறீங்கள் ,இதன் மர்மம் என்ன ?

**பெண் :** (கோபமாக) மில்க் வைற் சோப்பும் கோபால் பற்பொடியும் தான்.

**- சூரியன் தம்பி**

ஸ்டார் ரஜனி காந்த் அவர்கள் பேசுவார்கள்(பலத் தகைதட்டல்)இந்த ரஜனி ஒரு காந்தம். ரசிகர் களை எல்லாம் தன் பக்கம் கவர்ந்து இழுத்து விடுவார். இப்போது அவர் தன் கருத்தை கூறு வார்.
**ரஜனி:** தலைவர் அவர்களே வணக்கம் (த லையை கைகளால் கோதியபடி) படங்கள் வெற்றி பெறுவதற்கு காரணம் டைரக்டர் தான்னா எங் களுக்கெல்லாம் ஏன் பணத்தை லட்சம் லட்சமா அள்ளிக் கொட்டுறாங்க (கை தட்டல்) எவ்வ ளவோ கஸ்டப்பட்டு நாங்க நடிப்போம். காலு மேலை கால் போட்டு கட்..கட்..ஓ.கே..சொல் விட்டு வெற்றிக்கு நீங்கள் தான் காரணம் எண்டு சொல்லுவீங்க. அதை கேட்டுக்கிட்டு நாங்க போகணும் அப்படித்தானே?
இப்ப சொல்லுறன் சவால் விட்டு சொல்லுறன். நெஞ்சிலை தைரியம் உள்ள எந்தப் பயலாவது சொல்லட்டும். திரைப்படத்தின் வெற்றிக்கு டைரக்டர் தான் காரணம்ணு. அவன் அம்மாவி கிட்டை குடிச்ச பால் வாயால கக்கிறவரைக்கும் அடிப்பேன். சுத்தி சுத்தி அடிப்பேன். சுழண்டு சுழண்டு அடிப்பேன் (சிரிப்பு) ஹ !ஹ!ஹ!
(ரஜனி உட்காருகின்றார் ரசிகர்கள் விசிலடித்து ஆரவாரம் செய்கின்றார்கள்)
**வாரியார்** : பெரியோர்களே !தாய்மார்களே ! அமைதி..அமைதி.
கூட்டத்தில் ஒருவன் : யோவ் என்னய்யா நினைச்சிண்டிருக்கே உன் வயதென்ன எங்க வயதென்ன நாங்க பெரியவங்க நீர் இளம் காளையோ ?
**வாரியார்:** (பயம் ஏற்பட்டாலும் சமாளித்து) குழந் தைகளே அமைதி கொள்ளுங்கள்.
**வேறொருவன்:** என்ன நைனா குழந்தை கிழந் தைங்கிறா. எங்களை ஒண்டும் தெரியாத பாப் பான்னு நினைச்சுண்டியா மருவாதியா கூப்பிடு இல்லே இடத்தை காலி பண்ணு ஆமா.
**வாரியார்:** (தனக்குள் முணுமுணுக்கின்றார்) இதென்னடா வம்பாப் போச்சு...முருகா !
**கூட்டத்தில்:** ஏய்யா நான் என்ன கோமணத் தோடையா நிக்கிறன்.



படிப்பகம்

www.padippakam.com



**வாரியார்**: இல்லை அப்பனே..
**கூட்டத்தில்** : என்ன அப்பனா?
**வாரியார்**:முருகா !இல்லை தம்பி..தந்தைக்கே பாடம் சொன்னவன் என் அப்பன் முருகன். சுட்ட பழம் வேண்டுமா ? சுடாத பழம் வேண்டுமா ? என்று கேட்டு அந்த அவ்வைப்பாட்டியையே அசத்திய அந்த முருகனைப் போல் அறிவு பூர்வமான தத்துவங்களை கூறி என்னையே அசத்திய உன்னிடம் என் அப்பன் முருகனை பார்க்கிறேன்.
**கூட்டத்தில் இருந்தவர்** : (மகிழ்ச்சியாக) இப்பத் தாய்யா கரெக்டா பேசுறே
**வாரியார்** : அப்பாடா ! (மூச்சுவிட்டபின்) இப்போது இயக்குனர் அணியில் இருந்து தம்பி விசு அவர்களை அழைக்கின்றேன். இவருடைய பேச்சு சில சமயங்களில் பிசு பிசித்துப் போவதும் உண்டு. இங்கே எப்படி என்று பார்ப்போம்.
**விசு** : தாய்க்குலங்களே தந்தைக்குலங்களே தம்பி குலங்களே தங்கைக்குலங்களே எல்லோருக்கும் வணக்கம். திரைப்படத்தின் வெற்றிக்கு யார் காரணம் என்று கேட்கின்றார்கள். நடிக்கத் தெரிந்தவன் தான் இயக்குனராகலாம்.இயக்குனராவதற்கு நடிக்கத் தெரிய வேண்டும். கம்மியாய் நடிக்கத் தெரிஞ்சவன் இயக்குனர் ஆயிடுறான். இதனாலை எனக்கு நடிக்கத் தெரியும் எண்டு சொல்ல வரவில்லை. ஒண்ணுமே தெரியாவிட்டாலும் இயக்குனர் ஆகலாம். அதுக்காக எனக்கு நடிக்கத் தெரியாது எண்ணும் சொல்லமாட்டேன்.
நான் சொல்லுறது என்னண்ணா நடிப்பை சொல்லிக் குடுக்கிற ஒரு நடிகன் தான் இயக்குனர். இயக்குனரும் ஒரு நடிகர் தான் நடிக்கின்ற ஒரு நடிகரை இவன் நடிகன் இல்லை இயக்குனர் தான் என்று எப்படி சொல்லாம். (பாரதிராஜா விசுவிற்கு தொடையில் கிள்ளி)
**பாரதிராஜா**: நீங்க யார் பக்கம் பேசுறீங்க.
**விசு**: (சமாளித்து) நடிகர்களை நடிக்கவைக்கிறவன் இயக்குனர். நடிகர் விசுவை இயக்குனர் விசு நடிக்கவைக்கின்றார்.
(ரஜனி காந்த் விச்வை ஒரு மாதிரியாக பார்க்கின்றார்) சில சமயங்களில் இயக்குனர்களை இயக்குகின்ற நடிகர்களும் இருக்கின்றார்கள்
**ரஜனி**: (சிரிக்கின்றார்) ஹ!ஹ!ஹ!/....
**விசு**: நடிக்கிறவனை நடிக்கவைச்சு நடிக்கத் தெரியாதவரையும் நடிக்கவைச்சு தங்கள் நடிப்பால் ரசிகர்களை பயித்திய மாக்கிற நடிகர்களுக்கு நடிப்பை சொல்லி கொடுத்துக் கொண்டிருக்கின்ற பெரிய நடிகன் தான் இயக்குனர்.
இவ்வளவு நேரமும் நான் என்னைப் பற்றி சொல்லிவிட்டேன் இனி தீர்ப்பு சொல்ல வேண்டியது வாரியார் அவர்கள்..நன்றி வருகிறேன்.
**வாரியார்**: அப்பா முருகா இது என்ன சோதனை..நீ பேசாத பேச்சுக்கெல்லாம் நானே விளக்கம் சொல்லுவன். இந்த தம்பி விசு. என்ன பேசினார் என்றே புரியவில்லை. எல்லாம் அந்த அப்பன் முருகனுக்கே வெளிச்சம். அடுத்து சகோதரி குஷ்பு அவர்கள் நடிகர்கள் அணியின் சார்பாக பேசுவார் (பலத்த கைதட்டல்)
இந்தப் பூ சாதாரண பூ அல்ல என் அப்பன் முருகனுடைய பூஜைக்கு செல்லவேண்டிய பூ அப்படியான புனிதமான பூ இப்பொழுது பேசப் போகின்றது.
**குஷ்பு**: எல்லோருக்கும் வணக்கம். எனக்கு மேடையிலை பேசிப் பழக்கம் இல்லை. படத்திலை கூட எனக்கு டப்பிங் தான் குடுப்பாங்க( கைதட்டல்) இந்த டைரக்டர் எல்லாம் படத்தின் வெற்றிக்கு தாங்கள் காரணம் என்று இந்த மேடையில சொல்லுறாங்க. படத்திற்கு எங்களை புக் பண்ணும் போது நீங்க கொஞ்சம் தாராளமா நடிச்சாத்தான் நாங்க நல்லபடியா சினிபீல்டிலை நிலைச்சு நிற்கமுடியும் என்று எங்க காலை பிடிக்காத குறையா கெஞ்சுவாங்க. இப்ப தெரிஞ்சுக்கிங்க படத்தின் வெற்றி எங்கு இருக்கின்றது என்று (பலத்த கைதட்டல்) படம் ஆரம்பிக்கப்படும்போது நடிகர்களின் பெயரைத்தான் முதலில் போடுகின்றார்கள். இயக்குனர்களின் பெயரை கடைசியில் தான் போடுகின்றார்கள். இதில் இருந்து புரியவில்லையா இவர்கள் கடைசி தான் என்று (கைதட்டல்) பத்திரிகைகளில் எங்கள் படங்களைப் போட்டுத்தான் விளம்பரம் செய்கின்றார்கள். இயக்குனர்களின் படங்களை போட்டால் யாராவது படம் பார்க்க வருவார்களா ? (கைதட்டல்)இயக்குனர்களே எங்கள் முகத்தைப் பார்த்துக் கூறுங்கள் படத்தின் வெற்றிக்கு நீங்களா காரணம் ? (விசு மற்றப்பக்கம் திரும்பிப் பார்க்கிறார்)வாரியார் அவர்களே உங்கள் ஞானக் கண்ணை திறந்து பார்த்து நல்ல தீர்ப்பை கூறுங்கள்.யாரோ வேலை செய்ய தங்கள் பெயரை போட்டுக்கொள்ளும் கூட்டம் அல்ல நாங்கள். நாங்களே நடித்து நாங்களே வெற்றிக்காக உழைக்கின்றோம். நியாயம் எங்கள் பக்கம் தான் இருக்கின்றது என்பதை புரிந்து தீர்ப்பு கூறுங்கள் நன்றி.
**வாரியார்**: பூவாக வந்து புயலாக சீறிவிட்டு போயுள்ளார் குஷ்பு. அவர் கூறியது போல என் ஞானக்கண்ணால் பார்த்தேன் எனக்கு நியாயம் தெரிகின்றது. எல்லாம் முருகன் செயல் இறுதி



**சோமு** : ராகு உமது அழகைப்பற்றி என்ன நினைக்கிறீர்
**ராகு** : எனக்கு தெரியாது நான் என் முகத்தை கண்ணாடியில் பார்த்ததே இல்லை.
**சோமு** : பொய் சொல்லுறீர் சே வெடுக்க என்னத்திலை பாக்கிறீர்.
**ராகு** : சொறி பிறதர் நான் நம்ம சிரித்திரு ஆசிரியர் தலையிலை பார்த்துத்தான்...

- சாந் -



படிப்பகம்

www.padippakam.com



யாக இயக்குனர் அணியில் இருந்து திரு ராஜேந்தர் அவர்கள். அழகான தமிழில் நான் என் அப்பன் முருகனின் பெருமைகளை எடுத்துரைப்பேன். அந்த தமிழ் தம்பி ராஜேந்தர் வாயில் வந்து படாத பாடுபடும் இப்போது அதை பாருங்கள்.

**ராஜேந்தர்**: இங்கே நடப்பது பட்டி மன்றம்..எனக்குப் பிடிப்பது முட்டி மோதுவது. ஆனால் சில தத்துக்குட்டிகள் வந்து வெட்டிப் பேச்சு பேசி தாமும் கெட்டிக்காரர்கள் என காட்டி வார்த்தைகளை அள்ளி கொட்டிவிட்டு போயிருக்கின்றார்கள். இவர்கள் என் சுட்டி விரலுக்கு சமமானவர்கள். தட்டிக் கேட்க யாரும் இல்லை என்று எண்ணிவிட்டார்களா ?ஆடி நெளிப்பவர்கள் எல்லாம் நடிகர்களா ? இவர்களின் உயிர்நாடியே இயக்குனர்களின் கையில் அல்லவா ? இவர்களுக்கு பதில் சொல்ல இந்த டி.ஆர்.ஏன் அவன் தாடி போதாதா ?

வாரியார் அவர்களே நீங்கள் சாரியைக் கண்டு மயங்கி விடக்கூடாது. கூரிய எம் கருத்துக்களை கேளுங்கள்.

வேரில்லாமல் மரம் இல்லை ! இயக்குனர் இல்லாமல் படம் இல்லை! படமே இல்லையென்றால் நடிகர்கள் ஏது. நாங்கள் நடாத்துவோம் படப்பிடிப்பு. அதில் நடிப்பது நடிகர்களின் பொறுப்பு. வேண்டாம் உமக்கு வீண் துடிப்பு. இவர்களுக்கு அறிவில் ஏற்பட்டிருப்பது வெடிப்பு. தற்சமயம் தேவை இவர்களுக்கு படிப்பு.


தலைவர் அவர்களே வேண்டாம் உங்களுக்கு மயக்கம் திரைப்படத்தின் வெற்றிக்கு காரணம் இயக்கமே. நீங்கள் காட்டாதீர்கள் தயக்கம். உங்கள் தீர்ப்பில் இந்த மன்றமே வியக்கட்டும் என வேண்டி விடைபெறுகின்றேன் (கைத்தட்டல்)

**வாரியார்**: முருகனுக்கு அரோகரா இந்த பட்டி மன்றத்தில் பேசிய ஆறுமுகங்களும் நன்றாகத் தான் உரையாற்றினார்கள்.

படத்தின் வெற்றிக்கு நடிகர்களா ? இயக்குனர்களா? என்ற கேள்விக்கு இப்பொழுது பதில் வேண்டும் இவர்களுடைய வாதங்கள் அழகாக இருந்தாலும் அதில் நியாயம் இல்லை.

திரைப்படங்களின் வெற்றிக்கு காரணம் என் அப்பன் முருகன்தான் என்று எனது தீர்ப்பைக் கூறி இப்பட்டி மன்றத்தை முடித்து வைக்கிறேன். எங்கே எல்லோரும் சொல்லுங்கோ முருகனுக்கு அரோகரா.

கூட்டத்தில் எல்லோரும் : அரோகரா !



**ஒருவர்**: உதிலை போறவர் எத்தினை வீத வட்டியென்றாலும் யோசிக்காமல் காசு வாங்குவார்.

**மற்றவர்**: (கவலையுடன்) பாவம் கஸ்ரம் கூடிப் போச்சுப் போல இருக்கு.

**ஒருவர்**: விசர்க்கதை கதைக்கிறீர். அவர் திருப்பி முதலைக் கொடுத்தாத் தானே யோசிக்கவேணும்.

**- சுரேந்திரன்**

## ஆயுட்கைதி

வாழ்க்கைப்பாதையில்
வசந்தம் காணாது
ஏக்கப் பெருமூச்சில்
எதிர்காலம் இருள்மயமாய்
நாளைய வாழ்வின்
நாயகர்களின் பார்வையில்
அவளின் விலை
ஐந்து லட்சம்
கனவுகள் கற்பனைகளாகி
கானல் வரி பாடும்
கன்னியர் கூட்டத்தில்
அவளின்று ஆயுட்கைதி

**- செ. குணசிங்கம்**

cafpi
PRÊTS IMMOBILIERS
66, AV. LOUIS-ARAGON - 93000 BOBIGNY

நீங்கள் வாங்கும் வீட்டுக்கு
நாங்கள் கடன் ஒழுங்கு செய்கின்றோம்


*சகல தொடர்புகளுக்கும்*
*தமிழில் 48 65 95 65*



படிப்பகம்

www.padippakam.com






**சீனி, மா சிதறல்**

லாச்சப்பலுக்கு
'கோடம்பாக்கம்' என்ற பெயரை வை அல்லாவிட்டால் வைக்க வைப்போம்

ஆயிரக்கணக்கான ரசிகர் வெள்ளத்தில் நீந்தியவண்ணம் மூழ்கி எழுந்து ஆவேசப் பேச்சு..யார் ? ஏன் என்று குழப்பமாக இருக்கின்றதா ? வீணாக ஏன் காசிக்கு போகிறீர்கள் மன்னிக்கவும் யோசிக்கப் போகிறீர்கள். நமது நிருபர் கம்பி ஓ..மன்னிக்கவும் தும்பி 'கோடம்பாக்கம்' போய் சச்சரவு சம்பந்தமாக இதோ உளறுகிறார், சாரி..குளறுகிறார்..

எழில்மிகு பாரிஸ் நகர் தான் ஐரோப்பாவிலேயே தமிழ் கலை வளர்ச்சிக்கு முன்னோடியாக இருக்கின்றது என்பதை இப்போது அடித்து குத்தி நான் இந்த பாவாடையில் நின்று இல்லை மேடையில் நின்று சொல்லிவைக்க விரும்புகிறேன் என்று தனது பேச்சை ஆரம்பித்த 'நடிகமுனி' கௌபோய் கணபதிப்பிள்ளை கொலிவூட்டில் படப்பிடிப்பிற்கு முதல் முதலாக கடந்த மாதம் சென்றிருந்தும் கலைப் பற்றுக் காரணமாக படப்பிடிப்பை ஒத்திவைத்துவிட்டு வந்ததை நாம் யாரும் மறக்கமுடியாது ? தொடர்ந்து அவர் அறுக்கையில் 'கோடம்பாக்கம் 'ஏரியாவாக பாரிஸ் 'லாச்சப்பலை' தெரிவு செய்தவன் நான் அமுல்படுத்தவேண்டும் என்று ஒண்டரை மாதம் பாரிஸ் 10 மேரிக்கு முன்னால் ஒற்றைக்காலில் நின்று கலக்கு கலக்கியவன் நான்...இப்படி பல தொல்லைகளை நான் சந்தித்து சாதனை ஏற்படுத்திய போதும் இன்னமும் ஏன் இந்த மேரி அனுமதி வழங்க மறுக்கின்றது என்று எனக்கு புரியவில்லை..

இந்த வள்ளத்தில் நின்று நான் கேட்கிறேன். மன்னிக்கவும் உணர்ச்சி வசப்பட்டதால் வார்த்தைகள் தடம் மாறுகின்றது. ரசிகர் வெள்ளத்தில் நின்று கேட்கிறேன் பாரிஸ் 10 மேயரே ஒரு நாளைக்கு மாலை 6 மணிக்கு நீங்கள் எங்கள் 'கோடம்பாக்கம்' வந்து பாருங்கள் (லாச்சப்பல்) எத்தனை கலைஞர்கள், கதை, வசனகர்த்தாக்கள், இயக்குனர்கள், ஒளிப்பதிவாளர்கள், நடிகர்கள், ஒப்பனையாளர், ஓவியர்கள், பாடகர்கள், பாடலாசிரியர்கள், இசைஅமைப்பாளர்கள் இப்படி ஒரே கொலைஞர்கள் ஐயையோ..தப்புத் தப்பு

(10ம் பக்கம் பார்க்க)



படிப்பகம்

www.padippakam.com



**சினிமா சிதறல் தொடர்....**

..கலைஞர்கள் இவர்கள் சுதந்திரமாக நமது சினிமா பீல்டைப் பற்றிபேச வாழ, வழி சமைக்கத் தான் 'பாரிஸ் கோடம்பாக்கமாக' லாச்சப்பலை மாற்ற முடிவெடுத்தேன். ABC அதிரசத்தை நாம் ஆங்காங்கே வைத்து குடிப்பது வேதனைக்குரி யது அதற்கும் ஒரு இடம் வேண்டும்..தாய்குலங் களுக்கும் தனிவசதிகள் சமைக்கவேண்டும் என்று இடையிலே எழுந்து குழம்பிய முன்னணி நாய்கள் ,சாறி நாயகிகள் வாய் வெட்டு வள்ளியம் மையும், நன்னிக்கிவியும் ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே அத்தோசியம் (ஜாக்கி ரதை) என்று மிரட்டி ஏ.கே.47 ஐ (செருப்பை) கழட்டினார்கள்.

(உடனே அவர் இரண்டு கைகளையும் மேலே உயர்த்தி தமிழ் பண்பாட்டை செய்த வண்ணம்) கௌபோய் கணபதிப்பிள்ளை தொடர்ந்து அறுத் தார்...தாய்க்குலமே நான் பொதுவாகத்தான் கலைஞர்கள் என்று உங்களையும் இணைத்து குறிப்பிட்டேன்.. இதனை தப்பா எடுத்து அடிக் கடி ஏ.கே 47 ஐ எடுப்பதை தவிர்ப்பது நல்லது என்று சொல்லும்போது திடீரென மேடைக்கு வந்த பாரிஸ் 10 மேயர் அவர்கள் தமிழிலும் பிரெஞ்சிலும் 'கோடம்பாக்கம்' (லாச்சப்பல்) என்ற போட் பலகையை திரு. கௌபோய் கணப திப்பிள்ளையிடம் கொடுத்து..இனி யாரும் குழம் பவேண்டாம் என்றும் தொடர்ந்து கோடம்பாக்க கலைஞர்கள் தமிழ் படங்கள், நாடகங்களோடு நின்றுவிடாமல் தரமான பிரெஞ்சு நாடகங்களை யும் திரைப்படங்களையும் தரவேண்டும் என்று அறுத்தார். A.B.C அதிரசப்பிரச்னைக்காக நான் ஒரு மாளிகையை உருவாக்கி வருகிறேன். இந்த வேலைக் கட்டம் முடியும் வரை தற்காலிகமாக ஒரு கரவன் (நடமாடும் வீடு) கொண்டு வந்துள் ளேன். அதையும் பெற்றுக் கொண்டு இந்த 'கோ டம்பாக்கத்தில்' முடிந்த வரை நாற்றம் ஏற்படுத் துமாறு மன்னிக்கவும் மாற்றம் ஏற்படுத்துமாறு வேண்டி முடித்து வடையும் பெற்றார். பின்பு கேட்க வேண்டுமா ? ரசிகர்கள் அனைவரும் கௌபோய் கணபதிப்பிள்ளையை ரசிக வெள்ளத் தில் இருந்து காப்பாற்றினர்.பின்பு அனைவரும் ஆனந்தக்கண்ணீர் வெள்ளத்தில் மூழ்கியதாகவும் காப்பாற்ற பொம்பியே (தீயணைக்கும் படை) வந்ததாகவும் அப்பிடி இப்பிடி கதை அடிபடுகி றது.

- தும்பி




**1 :**

ஏன் உம்மடை உடம்பை இந்தக் குலுக்கு குலுக்கிறீர் ?

**2:**

டாக்டர் மருந்தை குலுக்கிக் குடிக்கும்படி கூறி னார். நான் குலுக்காமல் குடித்துவிட்டேன் அது தான்

- **நந்தினி**



நரேந்தி: என்ன இந்தத் தம்பி எவர் சொன் னாலும் ஒழுங்காக் கலியாண வீடுகளுக்கு போய் வாறார்.

சுரேஸ்: அதைவிட்டா அவருக்கு கோட்சூட் போட வேறை சந்தர்ப்பம் கிடையாதாம்.

**-சுரேந்திரன்**




ராமு - வீடும் தூரத்திலை வாங்கிப் போட்டன் இனி கார் பழகினாத்தான் சரி.

சோமு :- ஓம் மச்சான் நல்ல விஷயம் தான் நீ பழகு மச்சான் பரிசுக்குள்ளை சனங்களும் கூடிப் போச்சுதான்

**- ராகு -**



படிப்பகம்

www.padippakam.com



விபரீதக் கற்பனை: - நந்தினி

# காலுக்கு கண்கள் வந்தால்....

தம்புசாமி அண்ணர் ஒரு நாள் தனியே இருக்கும்போது இப்படி ஒரு கற்பனை வந்ததாம் அதை உடனே பக்ஸ் (FAX) மூலம் மூன் மார் கட்டில் இருந்து அனுப்பி உள்ளார் அதை சுடச் சுடச் தருகின்றோம்..

எனது முகத்தில் இருக்கும் இரு கண்களும், எனது இரு கால் பாதங்களில் இறைவன் படைத்திருந்தால் வாழ்க்கை அன்றாடம் எப்படி இருக்கும் என்று வித்தியாசமான தனது நண்பர்கள் சிலரிடம் கேட்டபோது தம்புசாமி அண்ணருக்கு கிடைத்த வெடிகள் இதோ:-



கண்ணாடி பார்க்கவேண்டிய அவசியம் இல்லை.

ஐயையோ..என் கண்கள்





இவருடைய கால்களை உடனடியாக ஆப்பிரேசன் செய்து எடுக்கவேண்டும்.
ஐயையோ அப்படியானால் என் கண்கள்.



என்னய்யா உனக்கு கண்ணில்லையா கண்ணை மிதிக்கிறியே...

அடுத்த இதழில் இதை தொடர விரும்புபவர்கள் உங்களுக்கு வரும் கற்பனைகளையும் எழுதி அனுப்புங்கள் உங்கள் புகைப்படத்துடன் பிரசுரிப்போம் (புகைப்படம் அனுப்பினால்)



படிப்பகம்

www.padippakam.com





மேரி ஜெஸ்மின்
றெமிஸ்

கே: சின்ன வயதில் நீங்கள் படித்த நூலில் தங்களை சிந்திக்க வைத்த நூல் எது?

**பதில் : சின்னவயதில் என்னை சிந்திக்க வைத்த நூல் பள்ளிக்கூடத்துக்கு போகும் போது நான் போட்ட காற்சட்டையின் பட்டன் அறுந்து போனபோது தைத்தநூல். (முயல் மார்க்)**

சென் லோறன் (பாண்டு)
றெமிஸ்


கே: ஏன் சார் ! எதுக்குத்தான் போட்டி பரிசுன்னு வரைமுறை கிடையாதா ? அந்த குறுக்கெழுத்துப் போட்டியைத் தான் சொல்கிறேன்.

**பதில் : இங்கு எல்லாம் மாறிப் போச்சு தம்பி. தாங்களே நடிச்சு தாங்களே விரும்பின பட்டம், பரிசு பெறுகிற நாடு இது**

எஸ்.மகேந்திரன்
பரிஸ்

கே: பரிசிலை எங்கையாலும் கடை வாடகைக்கு எடுக்கலாமா ராகு?

**பதில் : கடைகள் வந்து (BAIL) முற்பணம் அதிகம், வாடகையும் அதிகம் அதனால் இரண்டு மூன்று தமிழ் ரிஜிஸ்டர் பண்ணின 'அசாசியேசன்கள்' இருக்காம் எடுத்து நடத்துமன்.**



**மணியம்** : என்ன பரம் உமது மனைவி டைவோஸ் பண்ணப்போவதாய் ஊரிலை கதை அடிபடுகிறது உண்மையோ.

**பரம்** : உண்மை தான் மச்சான் .நான் வந்து பத்து வருஷமாச்சு இலங்கைக்கு இன்னமும் போக முடியவில்லை. அதனாலை என்னை டைவோஸ் பண்ணிப்போட்டு வேறு யாரையோ திருமணம் செய்து பாரிஸ் வரப் போறாளாம். அவள் வரமுன்பு நான் இலங்கைக்கு போகலாமென்று யோசிக்கிறன்.

மேரி செலின்
றெமிஸ்

கே : தங்களை தீவிரவமாக சிந்திக்க வைத்த பொன்மொழி எது ?

**பதில் : அதைத்தான் தீவிரமாக சிந்தித்துக் கொண்டிருக்கிறன்.**

அன்றும்.....இன்றும்....இனி என்றும்.....
தரமான மொழி பெயர்ப்பை
விரைவாக செய்து பெற்றுக்கொள்ள
நாடுங்கள்.......
மாஸ்ரர்
மொழிபெயர்ப்பு சேவை
- 42463722 -
90, PASSAGE BRADY 1ம் மாடி
PARIS 7510, FRANCE.



படிப்பகம்

www.padippakam.com





சி.உமசர்
சார்சல்

ராகு அவர்களே! இந்த மாத சிரித்திருவில் கணேசரின் படம் ஒன்றை கூட காணவில்லையே என்ன காரணம் ?

**பிள்ளையாரப்பா...?**

பிரான்ஸ் நாட்டில் காதல் கொள்வது எப்படி ? இங்கு வாழும் தமிழ் பெண்களை நம்பலாமா?

**ஏற்கனவே உங்களுக்கு காதல் இருந்ததினால் தான் இங்குவந்து வாழ்கிறீர்கள். இரண்டாவது கேள்வியைப் பார்த்தால் நீங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறீர்கள் போல் இருக்கிறது...? என்னையேன் மாட்டிவிடுகிறீர்கள்.**



எஸ்.விஜயன்
பாரிஸ் 5

கே : தீர்க்கசுமங்கலி படத்தில் வாணி ஜெயராம் பாடும் மல்லிகை என் மன்னன் மயங்கும் என்ற பாடல் யாரால் இயற்றப்பட்டது ?

**பதில்: நான் கண்ணதாசன் என்று சொல்ல ஆசிரியர் வாலி என்று பதில் எழுதச் சொன்னார் வேற பகுதி வந்து வைரமுத்துதான் என்று முடிவெடுக்க பிறகு ஒண்டு வந்து பிறைசூடன் என்று பிரச்னைப்பட வழியால போன நம்ம வண்ணையூரான் வந்து தான்தான் எண்டு ஒற்றைக்காலிலை நிக்கிறான் பாவி...**

கே: தமிழ் நாட்டின் அடுத்த முதல்வர் யார் ?

**பதில் : சாணக்கியர் ராஜாஜி, கர்மவீரர் காமராஜ், பெரியவர் பக்தவத்சலம் அறிஞர் அண்ணா வகித்த பதவி. இன்றைக்கு நாற்றமோ நாற்றம். இனி அதைப்பற்றி என்ன பேச்சு? இதில் யார் வந்தால் என்ன ?**

டுப்றைல் - றோஸ்பர்
றெமிஸ் 51100

கே : எமது றெமிஸ் நகரில் உள்ள புனித தேவ ஆலயத்தை பார்த்திருந்தால் நீங்கள் என்ன கூறுவீர்கள் ?

**பதில் : சகோதரரே இதுவரை அந்த புண்ணியம் கிடைக்கவில்லை. அழைப்பு இருந்தால் கண்டிப்பாக வருவேன்.**

பியேர்
றெமிஸ் 51100

கே : உங்கள் இளமைக்காதல் அனுபவங்களைப் பற்றி சொல்ல முடியுமா?

**பதில் : கடந்த காலத்தை நினைவு செய்து நிம்மதியாக இருக்கின்ற குடும்பத்தை குலைக்கவேண்டாம். மறக்கவில்லை, மறைத்து விட்டேன்.**






படிப்பகம்

www.padippakam.com






**பைத்தியங்களின் வைத்திய மனை**

இங்கு கடுமையான பைத்தியங்களை A பிரிவு எனவும், சாதாரண பைத்தியங்களை B பிரிவு எனவும் பகுதி பகுதியாக பிரித்து வைத்திருக்கிறார்கள். ஒரு நாள் மதியநேரம் B பிரிவில் அனுமதிக்கப்பட்ட பைத்தியம் ஒன்று திடீரென்று கிணற்றில் விழுந்துவிட்டது. இதனைக் கண்ட ஏனைய பைத்தியங்களும் அங்கு கடமையில் இருந்த வைத்தியர்களும் கிணற்றைச்சுற்றி பார்த்துக் கொண்டே இருக்கிறார்களே தவிர யாரும் அந்த பைத்தியத்தை காப்பாற்ற முற்படவில்லை. கிணற்றடியில் நின்ற கூட்டத்தை பார்த்த A பிரிவைச் சேர்ந்த ஒரு பைத்தியம் வேகமாக கிணற்றுக்கு அருகே சென்று நிலைமையை அறிந்ததும் நின்றவர்களைப் பார்த்து பாவம் உயிருக்காக போராடுகின்றான் அவனுக்கு நீந்தத் தெரியாது போல் இருக்கின்றது. எல்லோரும் திகைத்துப் போய் நிற்கிறீர்களே என்று கூறி உடனே கிணற்றில் குதித்த A பிரிவு பைத்தியம் B பிரிவு பைத்தியத்தை காப்பாற்றி கிணற்றுக்கு வெளியே கொண்டு வந்த சேர்த்தார்.

இந்தச் செய்தி மருத்துவமனை பூராவும் பரவி Aபிரிவில் இருந்த பைத்தியம் ஓர் உயிரைக் காப்பாற்றிவிட்டது. அவருக்கு பைத்தியம் மாறிவிட்டதுஎன முடிவு செய்து வைத்தியர்கள் பாராட்டு விழா ஒன்றை ஏற்படுத்தி அங்கு கடமையில் இருந்த வைத்தியர்களின் மருத்துவ சிறப்பை புகழ்ந்து பாராட்டியதோடு Aபிரிவு பைத்தியத்துக்கு மேடையிலே மாலைபோட்டு கௌரவிக்கப்பட்டுக் கொண்டிருந்த சமயம் கூட்டத்தில் இருந்த சிலர் இவரால் காப்பாற்றப்பட்ட Bபிரிவு பைத்தியத்தை காணவில்லை எங்கே ? எங்கே? எனக் கேட்டனர். இதனை பார்த்த Aபிரிவு பைத்தியம் ஒலி வாங்கியை வாங்கி பேச தொடங்கியது.

நண்பர்களே ! அமைதி..அமைதி.. கிணற்றில் வீழ்ந்த நண்பரை நான் காப்பாற்றியதும் எல்லோரும் அவரை ஈரமான உடைகளுடன் அப்படியே விட்டு விட்டு சென்றுவிட்டார்கள். அதனைப் பார்த்த நான் அவரை காய வைப்பதற்காக கயிற்றால் கழுத்தை கட்டி மாமரத்தில் தொங்க விட்டிருக்கிறேன் .இப்போது காய்ந்திருப்பார் போய் அழைத்து வாருங்கள் என பேசி முடித்தார்.

ஓடிச்சென்று பார்த்தபோது B பிரிவு பைத்தியம் நாக்கு வெளியில் வந்து இறந்து காணப்பட்டார். இதன்பின் Aபிரிவு பைத்தியத்திற்கு என்ன நடந்திருக்கும் என்று நாம் சொல்லவா வேண்டும்.

எங்கேயோ கேட்டவர் **- கௌதமன்**



ராமு : மச்சான் என்ர தம்பி சரியான குழப்படி

மோகன்: அது சரி அவன் டெய்லி குழப்படியோ வீக்என்டில குழப்படியோ

ராமு : சீரியசா சொல்லுறன் உனக்கு கிண்டலா இருக்கே..

மோகன் : இல்ல மச்சான் டெய்லி தண்ணி அடிக்கிறானோ? வீக்என்ட்டில மட்டும் தண்ணி அடிக்கிறானோ என்று கேட்டனான். **-ராஜன்-**



படிப்பகம்

www.padippakam.com





எழுத்தாளர் மகன்: சுந்தரவதனமே சுகந்தமே, அந்தரத்து வான்நிலவே, அழகிய வான்நிலவே, மந்திரித்துவிட்டாயே என் மனதை

எழுத்தாளர்: ஆகா..ஆகா..என் மகனே என்னே உன் ஞானம். எப்படியடா இச்சிறுவயதில் இத்த கைய வசனங்களைப் பேசக் கற்றுக்கொண்டாய்.

மகன்: இது பெரிய விசயமில்லையப்பா, எங்க அக்காவைப் பார்த்து பக்கத்து வீட்டு அண்ணன் பேசுற வசனங்கள் தான். - சுரேந்திரன்

## ஓ....அந்த நாட்கள்........

ஓ................
வானத்து வெண்ணிலவே - உன்
வதனத்து அழகெங்கே ?
ஈழத்து தமிழர்களின்
இதயக் கனல் கருக்கியதோ ?
(ஓ.....வானத்து..)
உன்னைத் தினம் காட்டி
உணவருந்த வேண்டியே தான்
என்னை அருகணைத்த
அன்னையவள் சொன்னதெல்லாம்
இன்றும் நினைக்கையிலே
இதயம் கனக்கிறது.
(ஓ....வானத்து...)
நாட்டுக்கு உதவாத
நடைமுறைக்கும் ஒவ்வாத
ஏட்டுச் சுலோகமதை
நீட்டியே எழுதியவர் தம்
பாட்டுக்குப் பயணத்தைக்
கட்டியவர் போனதைத் தாம்
மீட்டியே பார்த்திருக்கும்
மீந்திருந்த கூட்டமது
நீட்டி விடுமந்த
நெடுமூச்சின் அனலிடையே
நின்வதனம் கருகியதோ
நிலவே நீ சொல்விடுவாய்
-இலங்கையர்.கனகசபை

**கை கொடுத்த கை**

நாம் : திரை கடல் ஓடியும் திரவியம் தேடு என்று
தீந்தமிழ்பாட்டி திண்ணமாய் கூறிவிட்ட கதை இதை
கேட்டறிந்த இளைஞர்கள் பலர்
விரைந்து பாய்ந்தனர் பாரீஸ் நகர்
வானை முட்டும் வானூர்தியில்
வண்ண வண்ணக் கனவுகளுடன்
எண்ணம் பல கோர்த்தனர்.
காலம் காலமாய் தாக்கி வந்த பணக்
கஷ்டம் தீரு மெனக் கனவு கண்டனர்.
கட்டி விட்ட கோட்டைகள்
கடுகதியில் வெண்திரையாய்
போகுமென அறியாத இளைஞர் உள்ளம்
பாரீஸ் விமான நிலையம் கண்டவுடன் உவகை பூத்தது
வந்திறங்கிவிட்டோம் வருவது அடுத்து ?..
நான் : வேலை தான் தேடி அலைகிறேன்
காரணம் தருகின்றேன் பச்சை விசா வேண்டும்
கூட பாசையும் வரவேண்டும் - இதனால்
மனதுக்குள்ளே திண்டாட்டம் மாதாவிடம் மண்டாட்டம் பாதை தன்னை காட்டி
பாசைப் பிரச்னைக்கு கை கொடுத்தார் ஒருவர் - அவர்
வீல் பிரான்ஸ் எனும் தமிழர்
அகரமுதல் எழுத்தோடு ஆரம்பித்த இம்மொழி
பல மக்களுக்கிணையாய் என்னையும் தலைநிமிர
வைத்தது இன்று - திருமதி தவநாதன் வளர்மதி



பொன்னர்:- என்ன மழையும் வெய்யிலும் இல்லாத ,இந்த நேரத்தில் குடையோடை

சவாரி :- ஒரு இடத்திலை இன்னிசை மழையாம், வேறை ஒரு இடத்திலை தேனிசைமழையாம். இன்னுமொரு இடத்திலை பருவமழையாம் அது தான் தற்காப்பாய் குடையோட வாறன்.

– லோகன்



படிப்பகம்

www.padippakam.com



# ஐரோப்பிய சிரிப்புகள்



**ஒருவர்:** என்ன தாலி கட்ட நேரமாயிட்டுது மேடையில ஒருதரையும் காணேல்ல

**மற்றவர்:** ஐயர் வர லேட் அது தான்.

**ஒருவர்:** ஐயருக்கு என்ன பிரச்னை

**மற்றவர்:** அந்திரட்டி வீட்டில கொஞ்சம் லேட் பண்ணிப் போட்டினமாம் அதாலை கலியாண வீடும் லேட்

**ஒருவர்:** என்ன கலியாண காட்டில மாப்பிள்ளை யின் பெயருக்கு பக்கத்திலை 1000 டொலர் என்று போட்டிருக்கு.

**மற்றவர்:** முறைப்படி கலியாண காட்டிலை தொழில் என்ன என்று போடவேணும், மாப் பிள்ளை தொழிலை எழுத வெக்கப்பட்டு சம்ப ளத்தை போட்டுள்ளார்.

**ரவி- செல்லத்துரை**
பாசல், சுவிஸ்

**ராமு** : என்னப்பா கலியாணம் ஒரு சனிக்கிழமை கரிநாளிலை நடக்குது.

**மாப்பிள்ளை:** அண்டைக்குதானே ஹோல் கிடைச்சுது., அதோட அண்டைக்குத்தானே எல்லாரும் லீவு.

**ராமு** : ஐயர் கெதியா தாலியை கட்ட சொல் லுங்கோ முகூர்த்த நேரம் போகுது.

**ஐயர்:** கொஞ்சம் பொறுங்கோ இன்னும் வீடியோக் காரார் ரெடி சொல்லவில்லை.


**"புதிசும் பழசும்"**

கமக்காரன் மேற்கே பாற்பான், கூத்தாடி கிழக்கே பார்ப்பான் இது பழமொழி

ஐயர் தெட்சணை தட்டை பார்ப்பார்

மாப்பிள்ளை என்வலப் கவரைப் பார்ப்பார், இது புதுமொழி

# பலே பாண்டியா






படிப்பகம்


www.padippakam.com



இம்முறை குறுக்கெழுத்துப் போட்டியில் வெற்றி பெறுவோருக்கு பரிசுகளை வழங்கும் ஸ்தாபனம்
"சபா அன் சன்ஸ்"
48 40 43 68
1ம் பரிசு 150 F.F
2ம் பரிசு 100 F.F
3ம் பரிசு 50 F.F



# குறுக்கெழுத்து




அதிர்ஷ்டசாலி யார் ? முடிவு திகதி :15.7.92

இடமிருந்துவலம்
1) கம்யூனிசத்தின் தந்தை.
10) ஒரு சாப்பாடு.
13) முல்லைக்கு தேர் கொடுத்த வள்ளல்.
19) வாகன ஓட்டுனரை இப்படியும் அழைப்பார்கள்.
33) எல்லாம் தெரிந்தவர்களை இப்படியும் சொல்லலாம்.
36) குசேலர் மனதை குளிரவைத்த நாடு.
43) பாண்டவர்களில் கடைசி இவன்.

மேலிருந்து கீழ்
1) யாழ்ப்பாணத்தில் உள்ள துறைமுகம்.
4) மழைவரும் காலம்.
13) இவர் ஒரு கவிஞர்.
16) பிள்ளையாரின் வாகனம்.
42) இயமனுடன் சண்டை போட்டவர் இதில் தலைகீழாக நிற்கிறார்.
10) ஒரு நாட்டின் பிரதமராக இருந்தவர் பின் தூக்கிலிடப்பட்டார்.

## நந்தினி

உன் அம்மாவை கேட்டு படித்திருக்கலாம்




## சித்திரை- வைகாசி இதழ் குறுக்கெழுத்துப் போட்டி விடைகள்

1) நரகாசூரன்
6) காஞ்சித்தலைவன்
16) சிரித்திரு
19) பாரதி
40) அண்ணா
45) கர்ணன்

இடமிருந்து வலம்
1) நல்லதங்காள்
12) பஞ்சு
15) காசி
19) பாசி
25) நாரதர்
45) கண்ணன்

(கடந்த மாத குறுக்கெழுத்துப் போட்டி முடிவுகள் 31ம் பக்கத்தில்)



படிப்பகம்

www.padippakam.com






அன்பின் 'சிரித்திரு' அண்ணா உங்கள் 'சிரித்திரு' மிக நல்ல புத்தகம் சிரிப்புடன் சிந்தனைக்குரிய கருத்துக்களும் செய்திகளும் உள்ளன. வாழ்த்துக்கள்..நானும் இதில் சந்தாதாரராக சேர்ந்து தொடர்ந்து 'சிரித்திரு' வை பெற்றுக் கொள்ள விரும்புகிறேன்.

**- திருமதி ஜே. நரேஸ்குமார்**
**நோர்வே**

உங்கள் சித்திரை மாத 'சிரித்திரு' இதழில் வெளிவந்துள்ள குறுக்கெழுத்துப்போட்டியில் பிழைகள் வதந்துள்ளமையால் சரியான பதில் அளிக்கமுடியவில்லை. இந்த தவறுகள் எப்படி ஏற்பட்டது. ஆசிரியர் என்ற முறையில் இவைகளை நன்கு பார்த்துத் தானே அச்சில் வடித்திருக்கவேண்டும். இனிமேலும் இப்படியான தவறுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வீர்களென நம்புகிறேன். 'வளமுடன் வளர்க சிரித்திரு'.

**-ம.விவேகானந்தன்**
புளோமினில்

இத்துடன் எனது ஆக்கங்களை அனுப்புகிறேன். வசதிகள் வரும்போது உங்கள் பத்திரிகையில் பிரசுரிப்பீர்கள் என்று நம்புகிறேன். இருக்கும் சில கவிதைகளையும் அனுப்பினால் பிரசுரிப்பீர்களா?
சிரித்திரு புத்தகம் வெளியிட்டு பலரின் உள்ளக்கிடக்கைகளை அறிந்து கொள்ள வசதி படைத்துவிட்டீர்கள். உங்களுக்கு கோடி புண்ணியம் கிடைக்கும்.

**தி.சுதர்சன்**
பாரிஸ்

ஐரோப்பாவின் முதல் நகைச்சுவை ஏடு சிரித்திரு நாம் எதிர்பார்த்து இருந்ததைவிட தரத்தில் உயர்ந்து நிற்கிறது. லோகுவின் வட்டிகார வரதர் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தார். வயிறு குலங்கச் சிரிக்க வைத்தது சின்னக்குட்டியாரின் சிறப்புப் பேட்டி. ராகுவின் பதில்களில் பாசைப்பிரச்னை கறுப்பு கண்ணாடி போட்டு கண்ணடித்துப் பாரும். போன்ற பதில்கள் பிரமாதம். ஐரோப்பிய சிரிப்புக்கள், பட்டி மன்றம் என்பனவும் என்னைக் கவர்ந்தன. கணேசின் ஓவியத்தையும், வண்ணை தெய்வத்தையும் மறக்கமுடியுமா ? ஆசிரியரின் பணி தொடர வாழ்த்துக்கள்

**என்.சிறிதர்**
பந்தன்

உங்கள் முதல் 'சிரித்திரு' இதழ் எனக்கு கிடைக்கவில்லை. எனது நண்பர்களின் விளம்பரத்தினால், உங்கள் இரண்டாவது 'சிரித்திரு' இதழை உடனே பெற்றுவிட்டேன். தொடரட்டும் உங்கள் பணி. தருவேன் எனது ஆதரவை இன்றுடன் நான் உங்கள் வாசகர் ஆகுகின்றேன்.

**எம்.கே.ராஜன்**
சென்ற் அன்ரனிஸ்

**15, RUE DE L.ECOLE**
**POLY TECHNIQUE,**
**75005 PARIS**

**சென்ற இரு சிரித்திருவும் படித்தேன். கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் என் போன்ற வாசகர்களுக்கு கவலையை போக்கி சிந்தனை சிரிப்பை வரவழைக்கின்றது.**
**இதன் பக்கங்கள் அதிகரிக்கப்படமாட்டாதா?**
**ஆசிரியர் : உங்களைப் போன்றவர்களின் அன்பும் ஆதரவும் என்றும் இருக்குமாயின் பக்கங்கள் அதிகரிக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை.**

**சி. உமேசர்**
**1 ALLE PAUL LEAUTAUD**
**95200 SARLELLES**

**சித்திரை சிரித்திருவில் சுரேந்திரன் எழுதிய 'ஆசை யாரைவிட்டது' அருமையாக இருந்தது.**



**அறிவு**

ரயிலில் பயணம் செய்யும் ஒரு ஜெர்மனியரும் ரஷ்யரும் (இரண்டாம் உலக யுத்தத்தின் போது)

**ஜெர்மனியர்**: சீ ... என்ன மீன் தலையை சுட்டு சாப்பிடுகிறாயே....

**ரஷ்யர்**: உனக்கென்ன தெரியும்.இம்மீன் தலை மிகவும் விலையுயர்ந்தது. இதனைச் சாப்பிட்டால் மூளை நன்கு வேலை செய்யும்.

**ஜெர்மனியர்**: அப்படியா ? (வாங்கிச் சாப்பிட்டு விட்டு) சீ... இந்த மோசமான மீன் தலைக்கா ரூபின் கொடுத்தேன்.

**ரஷ்யர்**: பார்த்தாயா ? உன் மூளை உடனேயே வேலை செய்ய ஆரம்பித்து விட்டது

**- கௌரி**



படிப்பகம்

www.padippakam.com



# சித்திரம் பேசுதடி

அன்பின் உண்மை அர்த்தத்தை...தேடினான்...தேடுகிறான்



தன்னந் தனியே
சாய்ந்து படுத்து
தலையணை நடுவே
இரு விழி புதைத்து...

கண்ணீர் ஒன்றே
கவலை தீர்க்கும்
கவலை முடிவில்
அனுபவம் சேர்க்கும்...

ஆற்றா அழுகை
அமைதியின் அன்னை
அஞ்சும் நெஞ்சும்
அழுதால் தெளியும்...

காத்து காத்து
கடிதத்திற் கேங்கி
காயப்பட்டு
காய்ந்த நெஞ்சு...

காசுக்காக
காதலை விற்ற
காதலியின் கானம்
காதுக் கெட்ட...

கண்கள் சிவந்து
கண்ணீர் வடிந்து
கால்கள் நடந்து
நலிந்து இளைத்து

வானம் அழுவது
மழையெனும் போது
வையம் அழுவது
பனியெனும் போது
கானம் அழுவது
கலையெனும் போது
பாசம் அழுவது
பிரிவெனும் போது...

அன்புக்காக
ஓர் அறுபது நாளும் - பெற்ற
அறிவுக்காக
ஓர் ஆயிரம் இரவும்...

அழுதேன் அழுதேன்
தொடர்ந்து அழுதேன்...
வழிகளால் அல்ல
வெந்து போன இதயத்தால்

தேடுகிறேன் தேடுகிறேன்
தொடர்ந்து தேடுகிறேன்...
அழிந்துபோன நிம்மதியை அல்ல
அன்பின் உண்மை அர்த்தத்தை!

**கணேஷ்.**



படிப்பகம்

www.padippakam.com





# அதிக பயன் தரும் மூலிகை வல்லாரை

வேறு பெயர் : யோசனை வல்லி, பிரமமி, பிண்டீரி, சண்டகி, மண்டூகபரணி, சரசுவதிக் கீரை, சிங்கி

இதன் குணம் : சீதக்கடுப்பை நீக்கும், இரத்த மூலத்தைப் போக்கும், வாதநீர் போக்கும்,உடம்பு பலமடையும், தோல் நோய்களைக் குணப்படுத்தும், கண்நோய்களைத் தீர்க்கும், களைப்பைப் போக்கும், இரத்தத்தைச் சுத்தமாக்கும்,தாது வளம் உண்டாகும், வெள்ளை நோய் நீங்கும், மூளை பலம் பெறும், நினைவாற்றல் மிகும், வெட்டை நோய் நீங்கும், குடற்புண் போக்கும்.

வைத்திய முறையில் பயன்படும் பச்சிலைகளில் வல்லாரை தலைசிறந்த ஒன்றாகும். இந்த மூலிகை ஒற்றை இலை விடும் இனத்தைச் சேர்ந்தது. ஓரிலை பெரிதாகியதும் அதன் காம்பின் அருகிலிருந்து மற்றோர் இலை துளிர்க்கும். இதன் அடிக்காம்பு நீண்டு இளம் பச்சையாக இருக்கும். தண்டின் இலை இணையும் பகுதி பசுமை நிறமாயிருக்கும்.

இது கொத்துக் கொத்தாகக் கொடியும் இலையுமாகப் படர்ந்திருக்கும். இதன் இலை துவர்ப்பும் கசப்புமாக இருக்கும். இதில் தங்கச் சத்தும் செம்புச் சத்தும் இருக்கின்றன. இதன் பூக்கள் சிறியவையாகவும் செந்நிறமுடையவையாகவும் இருக்கும். இக்கீரையானது சிறந்த உணவாகவும் மருந்தாகவும் பயன்படுகிறது. வல்லாரையைத் துவையல் செய்து உண்ணலாம். பருப்பு வகைகளோடு சேர்த்து சமைத்துமுண்ணலாம். வாரம் ஓரிரு முறை இக்கீரையை உணவில் சேர்த்துக் கொள்வது நன்று. அளவுக்கு மிஞ்சியோ, அடிக்கடியோ உணவில் சேர்த்துக் கொள்வது உகந்ததல்ல. அடிக்கடி உண்பதினால் உடம்பு வலியும் தலை கிறுகிறுப்பும் மயக்கமும் உண்டாகும்.

தோல், நரம்பு, இரத்தம் சம்பந்தப்பட்ட நோய்களைத் தீர்ப்பதற்கு வல்லாரை சிறந்த மருந்தாகப் பயன்படுவதாக வைத்திய நூல்கள் கூறுகின்றன. இது சிறுநீர் பெருக்கி, உடல் தேற்றி, உரம் உண்டாக்கி, இரத்தம் உண்டாக்கி, ருதுவார்த்தனி எனப் பலவகைகளில் பயன் தருகிறது.

தீராத மலச்சிக்கல், உஷ்ணம் சம்பந்தமான வியாதிகள், காக்கைவலிப்பு, பாண்டுரோகம், இருதயப்படபடப்பு, மாலைக்கண், குடல்புண், சொறிசிரங்கு போன்ற நோய்கள் அனைத்தையும் குணப்படுத்தும் ஆற்றல் வாய்ந்த மூலிகையாக இது விளங்குகிறது.

வல்லாரையை உணவோடு உண்பதினால் சோகை நோய் நீங்கும். இரத்தத்தைச் சுத்தப்படுத்தும். இக்கீரையை காலை வேளையில் மிளகுடன் சேர்த்துப் பச்சையாகவே வெறும் வயிற்றில் உண்டு வந்தால் வெட்டைச் சூடு தணியும். இக்கீரையினால் வாதம், வாய்வு, அண்டவீக்கம், யானைக்கால், நெறிகட்டி, கண்டமாலை, பைத்திய ரோகம், படை, சூதகக்கட்டு,ஆதியாம் நோய்கள் நீங்கும். மூளையின் திறமையான செயற்பாட்டிற்கு இது வழிகோலுகிறது. சிந்தனாசக்தியைப் பெருக்கவும், நினைவாற்றலை வளர்க்கவும் வல்லாரை பெரிதும் உதவுகிறது. மனவளர்ச்சி குன்றியோர்க்கும் இது பெரிதும் பயன்படும்.

குட்டரோகம் என்னும் கொடிய நோயின் ஆரம்பக் கட்டத்தில் இக்கீரையைப் மருந்தாகப் பயன்படுத்தினால் நோய் நீங்கிவிடும் என்று மருத்துவர்கள் கருதுகிறார்கள். இக்கீரையைப் பச்சையாக உண்பதினால் நீண்ட ஆயுள் கிட்டும். "ஞானரச மூலிகை" களில் ஒன்றாகச் சித்தர்கள் இதனைக் குறிப்பிட்டுள்ளனர். வல்லாரைக் கீரையிலிருந்து வடித்தெடுக்கப்படும் எண்ணெய் தோல் பதனிடப் பயன்படுத்தப்படுகிறது. இக்கீரையைப் பொடி செய்து அப்பொடியைப் பூச்சிக் கொல்லி மருந்தாகவும் பயன்படுத்துகிறார்கள்.

உணவில் தவறாது வல்லாரை சேர்த்துக் கொள்ளுங்கள்.

**டாக்டர் .வி.ரி.இளங்கோவன்**





படிப்பகம்

www.padippakam.com



**மேதைகளின் தொகுப்பில் இருந்து:**

கவிஞன் ஒரு காலக்கண்ணாடி
பழமைச் சாயலின் பிரதிபலிப்பல்ல !
உள்ளத்தில் ஆவேசம் உணர்ச்சியில் புயல்
எழும்பிடும் அவனது இதயகீதம் !
எதுகை மோனை எழில் தரும் உவமை
வசீகர வர்ணனை - பழமைக்கு மெருகு
இத்தனையும் தேடி எங்கேங்கோ ஓடி
வார்த்தை முடையும் கலைஞன் அல்ல

**வால்விட்மன்**

உயர்ந்த உள்ளங்களின்-
உன்னத நேரங்கள்
வடித்துக் காட்டும் வரலாற்றுத் துளிகள்
அவையே கவிதை அதுவே வாழ்வின் நூல்

**ஷெல்லி**

மனிதா
நீயாருக்கும் தலைவணங்காதே
நிமிர்ந்து நட
கைவீசிச் செல்
உலகைக் காதலி
செல்வரை, செருக்குள்ளவரை
மதவெறியரை தள்ளி எறி
மனசாட்சியே உன் தெய்வம்
உழைப்பை மதி
ஊருக்கு உதவு
உனக்கு எட்டாத கடவுளைப்பற்றி பிதற்றாதே
சிந்தனை செய் செயலாற்று

**வால்ட் விட்மின்**

உன்னத எண்ணம்
உயர்ந்த உணர்ச்சி
எழுப்பிக் காட்டும்
இனிய சங்கீதம்
அதுவே "கவிதை"

**வால்டோர்**

**கேட்டு அனுபவித்தவை:**

திருமணஞ் செய்வதற்கு முன் மற்ற எல்லாப் பெண்களையும் விட திருமணஞ் செய்யப் போகின்ற பெண் அழகாயிருப்பாள்.
திருமணத்திற்குப் பின்னர் மனைவியை விட மற்றப் பெண்கள் எல்லோரும் அழகாயிருப்பார்கள்.

**- செ.குணசிங்கம்.**

## மாபெரும் துண்டுப்பிரசுர வெளியீட்டு விழா

காலம் : கெடுகாலம்
இடம் : பாரிஸ் 20 இல் இருக்கும்
மயான மண்டபம்
பிரதம விருந்தினர் : 'புறம் போக்கு'
வன்னியசிங்கம்
வெளியிடுபவர் : திருவாட்டி கந்தசாமியான்
முதற் துண்டு பெறுபவர்: பிரபல சிலபல கள புள
கல்லுண்டான்

அனைவரையும் அன்பில்லாமல்
அருவருப்புடன் இழுக்கின்றோம்
'சுணக்கம்'

- ஈழநிதி-



படிப்பகம்

www.padippakam.com



# அன்புள்ள நண்பரே

பேனா நண்பராக சேர விரும்புவோர்
உங்கள் வதிவிட அனுமதிப்பத்திர (விசா)
போட்டோ பிரதியுடன், உங்களின்
சிறிய அளவு புகைப்படத்தையும் இணைத்து
கீழேயுள்ள கூப்பனை நிரப்பி அனுப்பவும்.

அன்புள்ள நண்பரே

பெயர்: ..............................

முகவரி: ..............................

பிறந்த திகதி: ..............................

பொழுதுபோக்கு: ..............................




பெயர் : SRIVIJAYA (VIJAYAN)
முகவரி : 15, RUE DEL'ECOLE POLYTECHNIQ
UE
75005 PARIS
FRANCE.
பிறந்த திகதி : 18.01.1965
பொழுதுபோக்கு : விளையாட்டு, பேனாநட்பு, வானொலி, பொதுப்பணி.



பெயர் : K. THAMILINIYAN
முகவரி : BAHNHDF STR 2
3315 BATTERKINDEN
SWITWERLAND
பிறந்த திகதி : 01.02.1969
பொழுதுபோக்கு : பேனா நண்பர், பாடல்கள், கதை, கவிதை, சினிமா, சஞ்சிகை.


## பாரிஸ் வீடியோ மலர்

பாரிஸ் வீடியோ மலர் 5ல்
இடம்பெறவிருக்கும்
பாட்டுக்குப் பாட்டு
வேடிக்கை வினோத நிகழ்ச்சியில்
கலந்துகொள்ள ஆர்வம் உள்ளவர்கள்
உங்கள் பெயர்களை
சசி வீடியோ விஷனில்
பதிவு செய்துகொள்ளவும்
64, RUE LOUIS BLANC,
75010 PARIS.
Tel: 40 38 31 78
Mo: LA CHAPELLE ou GARE DU NORD

**ஒருவர்** : என்ன படம் ஓடிக்கொண்டிருக்கேக்க குளம்புறீர்

**மற்றவர்** : இல்லை சிவகுமாரின்ரை மறுபக்கம் என்டாங்கள். இவ்வளவு நேரமாய் பார்த்துக் கொண்டிருக்கிறன் சிவகுமாற்றை ஒரு பக்கத்தையே காட்டிக் கொண்டிருக்கிறாங்கள்

**லோகன்**



படிப்பகம்

www.padippakam.com




# என் காதலி



அன்று அதிகாலையிலேயே விழித்துவிட்டேன். மனதில் ஏதோ ஓர் படபடப்பு. இன்று எப்படியும் அவள் வந்து விடுவாள் என்ற நினைப்பில் மனதில் இனம்புரியாத மகிழ்ச்சியுடன் கடிகாரத்தை அடிக்கடி பார்த்துக் கொண்டேன். கடிகாரத்தின் ஒரு நிமிட அசைவும் எனக்கு ஒரு யுகமாகத் தோன்றியது. ஓர் மாத இடைவெளிக்குப் பின் அவளைச் சந்திக்கப் போகிறேன் என்ற மகிழ்ச்சியில் காலை 7 மணிக்கே என் காலைக்கடன்களை முடித்துக் கொண்டு அவளைச் சந்திக்க என்னைத் தயார் படுத்திக் கொண்டேன். வாசலில் கேட்கும் ஒவ்வொரு காலடியோசையும் "அவள் தானோ" என்ற நினைப்பில் என் கண்கள் அடிக்கடி வாசலை நோக்கின. நேரம் 10.30 நெருங்கிக் கொண்டிருந்தது. இந்நேரத்தில் என் வீட்டு காலிங்பெல் சத்தம் கேட்டு விரைந்து சென்று கதவைத் திறந்த போது "ஆம் அவள் வந்தேவிட்டாள்" எனக்கு அவளைக் கண்ட மகிழ்ச்சியில் என்ன செய்தென்றே தெரியவில்லை. அவளை அழைத்து வந்த அந்த வயோதிப தபால்காரர் அவளை என்னிடம் ஒப்படைத்துவிட்ட நிம்மதியில் திரும்பிப் போய்க் கொண்டிருந்தார். அவளை என் கைகளால் தழுவியபடியே என் அறைக்குச் சென்று கதவைத் தாழ்ப்பாள் போட்டுவிட்டு அவள் இதழ்களை மெதுவாகச் சுவைக்கத் தொடங்கினேன். அந்த அவள் வேறு யாருமல்ல என் உள்ளம் கவர்ந்த காதலி "சிரித்திரு" தான்.

- எம்.எஸ்.நாதன்



**காதலன்**: அன்பே ! நான் கவிஞனாவதா ? ஓவியனாவதா ?சிறந்தது?

**காதலி**: நீங்கள் ஓவியனாவதே மேல்.

**காதலன்**: ஏன் ...என் ஓவியங்கள் ஏதும் பார்த்தாயா?...


**காதலி**: இல்லை, நீங்கள் எழுதிய பல கவிதைகளைப் படித்தேன்.

**- கணேஷ்**

<u>சந்தை</u>

நல்ல விலைக்கு விற்றுவிட்டேன் என்று
பூரிக்கும் இதயமும்
இப்படி விலை ஏறிவிட்டதே என்று
ஏங்கும் நெஞ்சமும்
சங்கமிக்கும் இடம்

- எம்.எஸ்.நாதன்



**முத்து** :- உலகத்திலே ஒருவர் மாதிரி ஏழுபேர் இருப்பார்களாமே?

**மகேஷ்** :- ஆமாம் அதற்கு என்ன இப்போது.

**முத்து** :- போனமாதம் உன்னிடம் வாங்கிய ஆயிரம் பிராங்கை உன்னை மாதிரி ஒருவர் வந்து. வாங்கிக் கொண்டு போயிட்டார்.

**மகேஷ்** :- ???

-என்.ஜெயராணி



படிப்பகம்

www.padippakam.com



## சிந்தனை

**கலை**
உடலோடு பிறந்தது
கலையெனும் வம்சம்- அதில்
உயிராகக்'கலந்தது
'இசை'யெனும் அம்சம் !

**நிதானம்**
நாவினிக்கப் பேசி
நஞ்சூட்ட நினைப்பார்;
"சோ"தன்னில் மயங்கி
சோராதே நெஞ்சே!

**கடமை**
முடிந்தவரை உதவி செய்
மனந்திறந்து "பகிடி" செய்

**உணர்ச்சி**
"மதங்கள்"
பண்டங்களல்ல ;
பண்டங்கள்
பார்ப்பதற்கும்
வாயாலே சுவைப்பதற்கும்!


**வேதனை**
என்னுயிர்க் "காதலி"
மாற்றான் தோட்ட
மனைவியானால்
இது..வேதனை!
மாற்றான் தோட்ட
"மனைவி"...
என்னுயிர்க் காதலியானால்
இது..சோதனை !

**முதல் உதவி**
வாழ்க்கையில் முன்னேற
'முயற்சிகள்' எடுக்கிறேன்;
'முதல் உதவி' செய்வதற்கு
முன்வருவோர் யாருமில்லை!
**- வண்ணையூரான்-**

## வட்டிக்கார வரதர்

என்ன வரதர் நீங்களும் 'சார்த்'துக்கு யாத்திரையாய் வெளிக்கிட்டுட்டியள் அப்படி உங்களுக்கென்ன கஷ்டம்





ஆண்டவரேயெண்டு எனக்கொரு கஸ்ர முமில்லை.

அப்ப பிறகேன் உந்த உடம்பை தூக்கிக் கொண்டு வயல் வெளியளுக்காலையும் கல்லுகள் முள்ளுகளுக்காலையும் இழைக்க இழைக்க நடந்து வாறியள்





:இதிலை போற சனமெல்லாம் கஸ்ர நஸ்ரத்திலை தான் என்னட்ட ஓடி வாறவை வட்டிக்குக் காசெடுக்க, இப்ப இவையள் 'சார்த்'துக்கு யாத்திரை போய் நாளைக்கு கஸ்ரநஸ்ரம்மில்லாமல் நல்லாய் இருந்தால் பிறகு எவன் என்னட்டை வட்டிக்கு காசெடுக்க வருவான். கடைசியிலை என்ரை பிழைப்பிலை மண்விழுந்த மாதிரித்தான். அதாலை ஒருதருக்கும் பிரச்சினையள் தீரப்படாது எண்ட நேத்தியோடை தான் யாத்திரை நடக்க வெளிக்கிட்டிருக்கிறன்.





கணபதி...பிள்ளைத் தாச்சி போட்டியில் முதலிடம்

மற்றவர்:
பிள்ளைத் தாச்சிப்போட்டியில் கணபதி முதலிடமா?

பத்திரிகை படிப்பவர்:
எட மாறிப்படிச்சிட்டன். கணபதிப்பிள்ளை ...தாச்சிப் போட்டியில் முதலிடம் பெற்றார்.





படிப்பகம்

www.padippakam.com



'SIRITTIRU'
90, PASSAGE BRADY, சிரித்திரு PARIS 75010
TEL: 42 47 03 06

ஐரோப்பாவின் முதல் தமிழ் நகைச்சுவை ஏடான "சிரித்திரு" வளர்ச்சிக்கு உதவுமாறு தமிழ் வாசகர்களை வேண்டுகின்றோம்.
சிரிக்கவும் சிந்திக்கவும் உதவும் உங்கள் தோழன் "சிரித்திரு" வின் சந்தாதாரராகி அதன் வளர்ச்சிக்கு உதவி எம்மை ஊக்கப் படுத்துமாறு வேண்டுகின்றோம்.

- ஆசிரியர் குழு

## சந்தா விண்ணப்பப்படிவம்

"சிரித்திரு" சஞ்சிகையின் சந்தாதாரராக என்னைச் சேர்த்துக் கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

பெயர்:..............................................

* முகவரி:..............................................

..............................................

..............................................

சந்தாவுக்குரிய காலம்:..............................................

தொகை:..............................................

திகதி:........................ ..............................................

கையொப்பம்

வருடச் சாந்தா - 120 FF
சந்தா அனுப்பவேண்டிய வங்கி கணக்கு விபரம்:
வங்கி: CAISSE D'EPARGNE
வங்கி இலக்கம்: 17515 90000
கணக்கு இலக்கம்: 04558044245
கணக்கு பெயர்: AIYATHYRAI THURAIRAJAH
* முகவரியை ஆங்கிலத்தில் எழுதவும்

## நாயகர்கள்

எம் தேசமக்களின்
கால்களில்
பூட்டிய
விலங்கிற்காய்
கையிலே ஏந்திய
அயுதங்களோடு
வெறிச்சோடிய
பார்வையிலும்
வேதனை தெரியா
விடியலுக்கான
விழதுகள்....
இவர்கள்
புழுதியே
சந்தனக்குழம்பென
உருண்டு
பிரண்ட
பிஞ்சுகள்
பின்னடைவில்லா
நெஞ்சங்கள்
நாளைய தலைமுறைக்கு
வழிகாட்டியான
வரலாற்றில்
வாஞ்சையுள்ள
நாயகர்கள்.

-கி. கிறிஸ்ரியன்.



இசைப்பிரியர்களே....
உங்கள் மங்கள வைபவங்களா? கலை நிகழ்ச்சிகளா?
அழைத்து மகிழுங்கள் பாரிஸ் "இளையநிலா" இசைக்குழு
குரு : 46 36 49 28 தெய்வா : 47 20 32 01



படிப்பகம்

www.padippakam.com





# அமைச்சரான கழுதை

அப்போது அமெரிக்கக் குடியரசின் தலைவராக திரு. ஆபிரகாம் லிங்கன் இருந்தார். அந்தச் சமயம் அவருக்கு பல பிரச்னைகள் ஏற்பட்டது. தேர்தல் சமயத்தில் அவருக்கு உதவி செய்த பலர் அவரை ஏதாவது பதவி கேட்டு நச்சரித்துக் கொண்டிருந்தனர்.

ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும் போது அந்தப் பிரச்னையை மக்களுக்கு புரிய வைப்பதற்காக லிங்கன் அவர்கள் ஒரு உவமைக் கதையை கூறினார். அந்தக் கதை

ஒரு நாட்டு அரசன் வேட்டையாடுதவற்கு புறப்பட முன்பு அமைச்சரை அழைத்து, "நான் வேட்டைக்கு செல்லப் போகின்றேன் இன்று மழை பெய்யுமா ?" என்று கேட்டார்.

"மன்னர் அவர்களே ! இன்று மழை பெய்யாது. நீங்கள் தாராளமாக வேட்டைக்கு செல்லலாம்" என்று கூறினார் அமைச்சர். அமைச்சரின் பேச்சை நம்பி மன்னர் வேட்டைக்கு புறப்பட்டார். மன்னர் காட்டை நெருங்கிக் கொண்டிருந்த சமயம், எதிரே ஒரு குடியானவன் கழுதை மீது அமர்ந்து வந்து கொண்டிருந்தான். மன்னர் அவனை அழைத்து "குடியானவரே இன்று மழை பெய்யுமா ?" என்று கேட்டார்.

"மன்னா இன்று நிச்சயமாக மழை பெய்யும் நீங்கள் உடனே திரும்பி விடுங்கள்" என்று குடியானவன் கூறினான்.

குடியானவன் கூறியதை பொருட்படுத்தாது மன்னர் வேட்டையாட புறப்பட்டார். சிறிது தூரம் சென்றதும் கடும் மழை பெய்தது. இதனால் மன்னர் மழையில் நனைந்துகொண்டு திரும்பி வரும் போது மீண்டும் குடியானவனை சந்தித்து "மழை பெய்யும் என்று எப்படி உறுதியாகக் கூறினீர்!

"மழை பெய்யுமா பெய்யாதா என்பதைப்பற்றி எனக்கத் தெரியாது. ஆனால் என் கழுதைக்கு தெரியும். கழுதை தன் காதுகளை முன்பக்கமாக நீட்டிக்கொண்டால் மழை வரும் என்ற அனுபவரீதியான உண்மையை நான் அறிந்துள்ளேன்" என்று கூறினான்.

அரண்மனை திரும்பிய மன்னன் அமைச்சரை பதவியில் இருந்து விலக்கிவிட்டு, குடியானவனுடைய கழுதையை அமைச்சராக ஆக்கிவிட்டார். அதற்குப் பின்பு மன்னனுக்குப் பெரும் பிரச்னைகள் ஏற்பட்டுவிட்டது. ஏனென்றால் ஊரில் உள்ள எல்லாக் கழுதைகளும் தங்களுக்கும் அமைச்சர் பதவி தந்தாகவேண்டும் என்று கோஷம் போடத் தொடங்கிவிட்டன என்று கூறி முடித்தார் கதையை ஆபிரகாம் லிங்கன்.


## 'பாரிஸ் வீடியோ மலர் 4'

'பாரிஸ் வீடியோ மலர் 3 இல் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய 'வினாக்கோலம்' நாடகப்புகழ் கலைஞர்கள் பங்குபற்றும் பி. லோகதாசின்

* மலர்களில்லா மாலை (நாடகம்)
* கலையில் மலர்ந்த கவிதை (புதுமை நிகழ்ச்சி)
* நெஞ்சில் நிறைந்தவை
* கண்டதும் கேட்டதும் (செய்தித்தொகுப்பு)

இன்னும் பல
இன்னும் பல சுவையான அம்சங்கள்
அனைத்து வீடியோக் கடைகளிலும் கிடைக்கும்.




**ஒருவர்** : மரத்தில் இளநீர் பிடுங்கி குடிப்பமே

**மற்றவர்** :-ஒரு ஆள் ஏறிப்பிடுங்க இரண்டு பேரும் குடிக்கிறது சரியில்லை. நான் பாதி மரம் ஏறுறன் மிச்சம் பாதிக்கு நீ ஏறிப்பிடுங்கு இரண்டு பேரும் குடிப்பம்.

**நந்தினி**



படிப்பகம்

www.padippakam.com






**ஒருவர்** :- தாய்லாந்து எண்டு அந்த நாட்டிற்கு ஏன் பேர் வைச்சவை?

**ஏகாம்பரம்** :- அந்த நாட்டிலை இருக்கிறவைக்கு தகப்பன் இல்லையாம் , தாய் மட்டும்தான் இருக்கினையாம்.

-நந்தினி-

**சாந்தன்** : ஏனண்ணை மனநோயாளி போல திரியுறீங்கள்..மகளின் கலியாணம் பிரான்சில என்னாச்சு ?

**முகுந்தன்**: செவ்வாய் குற்றமாம் பிள்ளைக்கு, ஏழு வாழைவெட்டித்தான் தாலி கட்டுவன் எண்டு மாப்பிள்ளை அடம் பிடிக்கிறார். அங்கை வாழைப்பிரச்னை அதுதான் யோசிக்கிறன்.




-திவ்யா-


'SIRITTIRU'
90, PASSAGE BRADY,
PARIS - 75010
FRANCE.
TEL: 42 47 03 06

புதுமையான முறையில்....அழகிய வர்ணங்களில்
மங்களத்திருநாட்களுக்குரிய அழைப்பிதழ்கள்
விளம்பர பிரசுரங்கள் இன்னும் உங்கள்
தேவைக்குரிய அனைத்து அச்சுவேலைகளுக்கும்
விளம்பரபோட் பலகைகள்
வாழ்த்து மடல்கள்





**ஒருவர்** :- டாக்டர் நான் உங்களுக்கு நன்றி சொல்லிவிட்டு போகவந்தனான்.

**டாக்டர்** :-நீர் என்னிடம் வைத்தியம் செய்யவில்லையே.

**ஒருவர்** :- என்னுடைய மாமா உங்களிடம் வைத்தியம் பார்த்தார். அவருடைய சொத்திற்கு நான்தான் வாரிசு. இப்பொழுது எல்லாச் சொத்தும் எனக்குத்தான்.

-மஞ்சுளா-



படிப்பகம்

www.padippakam.com



# சிரிப்புக்கும் ஒரு கருவி

அதோ போகிறாள் கன்னி
அவள் பெயர் தான் பொன்னி
அடித்தேன் ஒரு போத்தல் தண்ணி
அலைந்தேன் நான் அவளை எண்ணி
என்னிடம் அகப்படாமல் மறைந்தாள்
அந்த கள்ளி
அதை கண்டு எழும்புகிறது
என் மனம் துள்ளி
ஆனால் என் இதயம் துடிக்கிறதோ
அவள் பெயர் சொல்லி
அதை பார்த்து ரசிக்கிற
அவளோ சாகசவல்லி
அவளை என் மனம் பூஜிக்கிறதே
ரோஜாபூக்களாய் அள்ளி
வாழ்க்கை முழுவதும் இருக்கப்போவதோ
அவள் இதயத்தில் ஓர் புள்ளி
இந்த கவிதை எழுத காரணமாய் இருந்ததோ
இந்த நூறு மில்லி
அத்துடன் துணை புரிந்ததோ
சிக்கன் சில்லி

- கணேஷ்-

அப்படியா ? இது ஈடாகுமா ?

அம்மா சொன்னாள்
தனக்கும் அம்மா உண்டாம்
இங்கு அல்ல இலங்கையிலாம்
அங்கு எல்லாம்
பழம் தரும்
வாழை உண்டாம்
பலா மரம் உண்டாம்
மாமரம் உண்டாம்
மரக்கறி காய்திடும்
கொடி கன்றுகளும் உண்டாம் - இங்கு
மரக்கறி எல்லாம்
சூப்பர் மார்க்கற்றிலும், சந்திரன் கடையிலும்
காணலாம் தானே.

அம்மா சொன்னாள்
அம்மாவின் அம்மாவை
அம்மம்மா என்று சொல்ல
வேண்டுமாம்
அம்மம்மா கோழி வளர்ப்பாவாம்
மாடு , ஆடும் வளர்ப்பாவாம்- இங்கு
நான் இவை எல்லாம்
ரி.வி.யில் பார்க்கிறேன் தானே
ஆனால்....
எனக்கு நன்கு தெரியும்
நாயும், பூனையும்
இவை பக்கத்து வீட்டு
அன்ரி கொஞ்சி விளையாடும்
செல்லப் பிராணிகள் தானே


- சீனிவாசகம் சற்குணரெட்ணம்



நாரதர்: தம்பி- அதில் போகும் அல்ஜீரிப் பெண்ணைப் பார்த்து 'மாஞ்சோலை கிளி தானோ' என்ற மெட்டில ஒரு பாட்டு எடுத்து விடு பார்ப்பம்.

தம்பி:........ 'மாந்தரா ஜொலி கிளிதானோ
மார்செயில் மான்தானோ
வேர்செயில் குயிலும் நீ தானோ
அல்ஜீரி அடைதானோ
நசெனல்ரி பிரெஞ்தானோ
கொப்பாவும் கொம்மாவும்
மெலோஞ்தானோ'
இந்த பாடலை
பூர்த்தி செய்யுங்கள் பார்க்கலாம்
சிறந்த பாடலுக்கு பரிசும் உண்டு

-நல்லூரடி போய்-



**தம்பர்**: உதிலை போற றைவர் கந்தையா லைன் ஓடுறதிலை பெரும் மன்னனாம்.

**முருகர்**: C.T.B றைவர் எண்டா லைன் ஓடத் தானே வேணும்.

**தம்பர்**: அதுதான் சுப்பையற்றை பெட்டை மருதனாமடத்திலை படிக்கேக்கை அந்த லைன் ஓடினார். பிறகு அவள் சாவகச்சேரியிலை படிப்பிக்கேக்கை அந்த லைன் ஓடினார்.

**முருகர்**: பிறகு....

**தம்பர்**: பிறகென்ன சுப்பையற்ரை பெட்டையிலையே லைன் ஓடி தன்னோடை சேர்த்துப் போட்டார்.

- **சுரேந்திரன்**



படிப்பகம்

www.padippakam.com



# மறக்க முடியுமா?

எம் மண்ணில் இருந்து மறைந்தாலும் இன்றும் எம் இதயத்தில் நிறைந்து வாழ்பவர்களில் கலைஞர்களும் எழுத்தாளர்களும் அதிகம்.
தாங்கள் மறைந்தாலும் காலத்தால் அழிக்கமுடியாத, எங்களால் மறக்கமுடியாத தங்கள் படைப்புக்களை வழங்கி இவர்கள் இன்றும் எங்கள் மனங்களில் நிறைந்து நிற்கின்றார்கள்.
கலையரசு சொர்ணலிங்கம் மறைந்துவிட்டாரா ? நடிகமணி வி.வி.வைரமுத்து மறைந்துவிட்டாரா ? குமார் தனபால், டிங்கிரி சிவகுரு..இன்னும் இந்த பட்டியல் நீண்டு கொண்டு போகலாம்.. அனால் இவர்களின் உடல்கள் தானே மறைந்தது. இவர்களின் படைப்புக்கள் எங்கள் மனக்கண்களில் தோன்றி அவர்களின் உருவங்களை எம்முன்னே நிறுத்தி என்றென்றும் நினைக்க வைக்கின்றதே ! இவர்களை எல்லாம் மறக்கமுடியுமா ?
இன்று ஐரோப்பிய நாட்டில் பல கலைஞர்கள் வாழ்கின்றோம். இந்த கலைஞர்களால் ஒப்பனைக் கலைஞர் பெஞ்சமின் அவர்களை மறக்கமுடியுமா? கலைமுகம் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் அவர் கூறுகின்றார். ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட நடிகர்களுக்கு தான் ஒப்பனை செய்திருப்பேன் என்று ஐம்பது வருடத்திற்கும் மேலாக கலைத்துறையோடு ஒன்றி, மேடைக்குப் பின்னால் நின்று அரங்கங்களையும் நடிகர்களையும் அழகுபடுத்தி வந்த அந்த ஒப்பற்ற கலைஞனை மறக்கமுடியுமா ?
வாழும்போதே கலைஞர்களை வார்த்துபவர்களும், வளரும் கலைஞர்களுக்கு பொன்னாடைகளும் பட்டங்களும் வழங்குபுவர்களும் தங்களை தனது ஒப்பனையால் அழகுபடுத்தி நடிகர்களாக மக்களுக்கு காட்டிய அந்த கலைஞரை ஏனோ நினைக்க மறந்துவிட்டார்கள்.
சத்தியஜித்ரே மறைந்த பின்பு அவரின் சாதனைகளை பக்கம் பக்கமாக எழுதுகின்றார்களே. நம்ம சிவாஜி கணேசன் நடிகன் இல்லையா? இவரைப் பற்றியும் இரண்டு வரி எழுதலாமே!
தமிழனாக பிறந்த ஒரே காரணத்திற்காக பெரிய விருதுகள் இவரை திரும்பிப் பார்க்க மறுக்கின்றது என்பது உண்மையாக இருக்கலாம். பட்டங்கள் கிடைக்காததால் சிவாஜி நல்ல நடிகன் இல்லை என்று கூறமுடியுமா?
பாசமலர் ராஜாவா? கப்பலோட்டிய தமிழன்வ.உ. சிதம்பரம் பிள்ளையா? கட்டப்பொம்மனா? காவல் தெய்வமா? எந்த பாத்திரத்தை ஏற்றாலும் அந்த பாத்திரமாக மாறி பாத்திரங்களுக்கு பெருமை சேர்த்துக் கொண்டிருக்கும் அந்த உயர்ந்த நடிகனை மறக்கமுடியுமா?
நான் அதிகமாக படிக்காதவன். இதை அடக்கத்திற்காக சொல்லவில்லை உண்மையும் அது தான்.
சிலர் தாம் நிறையப் படித்தவர்கள் என்பதை மற்றவர்களுக்கு தெரியப்படுத்துவதற்காக சிறிய உதாரணத்திற்கு கூட பெரிய ஆங்கில எழுத்தாளர்களான, ஆர்னாலட்டு, டாயின்சி, வின்செண்ட்



சிமித் ஆகியோரின் கருத்துக்குளை கூறுவார்கள். சாண்டிலியன், பெரியார், ஜெயகாந்தன், வலம்புரிஜான் போன்றோர் எழுதிய புத்தகங்களை படித்தாலும் அந்த ஆங்கில எழுத்தாளர்களின் கருத்துக்களுக்கு இணையாக நல்ல கருத்துக்களை கூறலாம் என்று நான் நினைக்கிறேன்.

(அடுத்த பக்கம் பார்க்க)



**வேலையாள்**: முதலாளி கடையில் வியாபாரம் இவ்வளவு மந்தமாக இருக்குதே எப்படி கடைக்கு வாடகை மற்றும் ஆட்களுக்கு சம்பளம் எல்லாம் கொடுக்கிறீர்கள் ?

**முதலாளி**: அதுதான் நான் வேறு இடத்தில் இரண்டு வேலை செய்கிறேன்

- கௌரி



படிப்பகம்

www.padippakam.com



## மறக்க முடியுமா தொடர்...

அக்பர் இந்துப் பெண்களை மணந்தவர். அது இந்து இஸ்லாமிய ஒற்றுமைக்கு அவர் ஊன்றிய வித்து என்று தான்பலரும் கருத்துக் கூறுகின்றார்கள். ஆனால் தோடர்மால், ராஜா மான் சிங் போன்றவர்கள் தங்கள் பதவிகளை தக்கவைத்துக் கொள்வதற்காகவே தங்கள் பெண்களை அக்பர் மணமுடித்தபோது பேசாமல் இருந்தார்கள்என்கிறார் சாண்டில்யன்.இப்படி உண்மைகளை தேடி கண்டுபிடிப்பவர் சாண்டில்யன்.

பெரியாரின் எழுத்தில் ஒரு அழுத்தம் இருக்கும். ஆளுமை இருக்கும் மற்றவர்கள் எல்லாம் வள்ளுவர் சொன்னார், வள்ளலார் சொன்னர் என்பார்கள். பெரியாரோ நான் சொன்னதை வள்ளுவரும் சொல்லி இருக்கின்றார் என்று வீரமணி கூறியதாக ஞாபகம் என்பார். பேசுவதற்கும் எழுதுவதற்கும் பெரியாரை பின்பற்றவேண்டும்.

தூக்கம் வரவில்லையே ஒரு புத்தகம் படிப்போம் என்று வலம்புரிஜானின் புத்தகத்தை எடுத்துப் படித்தால் அவருடைய எழுத்து எம்மை தூங்கவே விடாது எளிய நடையில் அரிய தத்துவங்கள்.

இவர்கள் எழுதிய கருத்துக்களைவிட உயர்ந்த கருத்துக்களை ஆங்கில எழுத்தாளர்கள் எழுதியிருக்கலாம். ஆனால் உங்களுக்கு உதாரணம் கூறுவதற்கு இவர்களுடைய கருத்துக்கள் ஒன்றும் வரவில்லையே என்று தான் கூறவந்தேன்.

எழுதுபவர்கள் எல்லோரும் எழுத்தாளர்களாகிவிட முடியாது தான் எழுதுவதை தன் வாழ்க்கையிலும் எவன் நடைமுறைப்படுத்துகின்றானோ அவன் தான் மக்கள் எழுத்தாளன். வந்தே மாதரம் என்று சொன்னால் அடிவிழும் உதை விழும் என்று தெரிந்தும் வந்தே மாதரம். வந்தே மாதரம் என்று உரக்கச் சொன்னவர் பாரதி


தனது எழுத்தை தன் வாழ்விலும் செயல்படுத்தியதால் பாரதி மக்கள் எழுத்தாளன் ஆனார். நெருப்பு ஆக்கத்திற்கும் பயன்படும், அழிவையும் ஏற்படுத்தும். இது நெருப்பின் குற்றமல்ல நெருப்பை மூட்டுகின்றவனை பொறுத்தது. எழுத்தும் அப்படித்தான். ஜெயகாந்தன், புதுமைப்பித்தன் டானியல், இளங்கீரன்..இப்படியானவர்களின் எழுத்து சமுதாயத்தில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது. இவர்களின் படைப்புக்களை மறக்கமுடியுமா ? இன்னும் மறக்கமுடியாதவை எத்தனையோ மலரும்.... - **வண்ணை தெய்வம்**









**முருகன்** : என்ன மச்சான் கடுமையாய் யோசிக்கின்றாய் ?

**வேலன்** : இல்லை மச்சான் நான் ஏன் அவசரப்பட்டு கலியாணம் செய்தேன் என்று தான் யோசிக்கின்றேன்.

**முருகன்** : ஏன் அப்படி சொல்லுகின்றாய்?

**வேலன்** : பின்னையென்ன மச்சான், இஞ்சை பார் சனம் திரிகின்ற மாதிரியை, இப்பிடி நானும் பிரான்சுக்காரியை சயிற்றா மடக்கிக்கொண்டு சுதந்திரமாய் இருந்திருக்கலாம்.

**முருகன்** : இங்கே கூப்பிட்ட என்ர மனைவி என்ன சொல்லுகின்றாள் தெரியுமே ?

**வேலன்** : என்ன சொல்லுறா (மிக அவசரமாக)

**முருகன்** : தான் ஏன் அவசரப்பட்டு கலியாணம் செய்தேன் என்று யோசிக்கிறாளாம்.

**, எம்.கே ராசன்**



படிப்பகம்

www.padippakam.com



# மலர்களே மலருங்கள்!






பிரான்ஸ், சார்சலில் வசிக்கும் நாக ராசா - சுசிகலா தம்பதிகளின் புதல்வி **ஜெஜிதா** 01.06. 92 அன்று தனது பிறந்ததினத்தை கொண்டாடினார். பலகலையும் கற்று பல்லாண்டு வாழ 'சிரித்திரு'வும் வாழ்த்துகின்றது.

'சிரித்திரு சிறுவர்களே' இப்பகுதி உங்களுக்காக
கடந்த மாதம் பிறந்த நாளை கொண்டாடிய 10 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் உங்கள் படத்துடன் கீழே உள்ள கூப்பனையும் இணைத்து அனுப்பினால் நாம் இலவசமாக பிரசுரிப்போம்.

பெயர்:..........................................................
பிறந்த திகதி:..............................................
முகவரி:........................................................
..................................................................



பிரான்ஸ் 'செவ்றோனில்' வசிக்கும் இந்திரகுமார் தம்பதிகளின் புதல்வி செல்வி : சாருகா 04.05.1992 தனது 3 வது பிறந்த நாளைக் கொண்டாடினார். இவர் பல் கலையும் செல்வமும் பெற்று நீடூழி வாழ 'சிரித்திரு' வாழ்த்துகின்றது.

## குறுக்கெழுத்துப்போட்டி முடிவுகள்

சித்திரை, வைகாசி இதழ்களில் வெளியான குறுக்கெழுத்துப் போட்டியில் கலந்துகொண்ட நூற்றுக்கணக்கான வாசகர்களில் ஏராளமானவர்கள் சரியான விடையை எழுதியிருந்தார்கள்.
11. 06. 92 அன்று சிரித்திரு அலுவலகத்தில் அதிஷ்டம் பார்க்கப்பட்ட போது தெரிவான அதிஷ்டசாலிகள் மூவர் விபரம் வருமாறு:

**முதலாம் பரிசு:** S. SAHIYANANTHAN,
5, RUE DE LA GOUTTE DOR, 75018 PARIS.

**இரண்டாம் பரிசு:** V. T. LAKSHMAN,
2 BIS, IMPASSE FRANCHEMONT, 75011 PARIS.

**மூன்றாம் பரிசு:** M. K. RASAN,
188 BIS, RUE DU LANDY, 93200 ST. DENIS



படிப்பகம்

www.padippakam.com




பாரிஸ் நகரில் நம்நாட்டு உணவுகளை
சுவையுடன், திருப்திகரமாக சிறந்த உபசரிப்புடன்
உண்டு மகிழ்ந்திட என்றும் நாடுங்கள் !

# சுமித்திரா உணவகம்

## * வீடியோ கிளப் *

**51, RUE JEAN PIERRE TIMBAUD**

**75011 PARIS . TEL: 43 55 91 02**

**Mo: PARMENTIER / COURONNES BUS : 46**

**வீடியோ, ஒடியோ, டிஸ்க், புதினப் பத்திரிகைகள்,**

நம்நாட்டு - மேலைநாட்டு மதுபானங்கள் அனைத்தும் கிடைக்கும்

# வாகன ஒழுங்குகள்

* விரைவான சேவை
* பாதுகாப்பான வாகனம்
* குறைந்த செலவு

* ஆலயவழிபாட்டு போக்குவரத்து ஒழுங்கு
* கொண்டாட்டங்களுக்கான போக்குவரத்து ஒழுங்கு
* வீடு இடம் மாறும் போது பாதுகாப்பாக பொருட்களை இடம்மாற்ற ஏற்பாடுகள்
* விடுமுறை, சுற்றுலா உல்லாசப் பிரயாணம்

உங்கள் அனைத்து தொடர்புகளுக்கும் இன்றே நாடுங்கள்

## A. NITHY அ. நித்தி

38 (A) RUE DU Fbg DU TEMPLE, 75011 PARIS.
தொலைபேசி 43 03 07 08 (REPONDAR)(ஒலிப்பதிவு)
43 03 07 00 48 05 02 14




படிப்பகம்